
# தமிழ்த் தாயின் அன்பு மகள்



# அமரர்
# நாகம்மா கந்தையா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

"அன்னை ஓர் ஆலயம்"



அமரர்

# நாகம்மா கந்தையா

அவர்களின் சிவபதப்பேறு குறித்த

# நினைவு மலர்

14.07.2018

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாசமிகு அம்மாவின்
# பாதக்கமலங்களில் படையல்

அன்பும் அறமும் ஈந்து எம்மையாக்கி
துன்பம் துடைத்து நின்று துணையாகி
இன்பம் இலங்கிவர இதயங்கள் நல்கி
வண்ணம் படைத்த வடிவழகே அம்மாவே!
மண்ணை விட்டு மறைந்து போனாயோ!

வையகத்தில் வாசமுறக் காத்தாய் அம்மா!
வான விருந்தாய் ஆனாய் அம்மா
கையறுந்து கலங்கித் தவித்தோம் தாயே!
கடவுள் தாள் நீரமரக் கரங்கள் குவித்தோம்

வேதனை தான் சுமந்து நின்றோம் விரும்பும் எங்கள்
சாதனை நாயகியாம் தாயே உங்கள்
சரித்திரத்தை பாடியருளி
பாதக் கமலத்தில் படையல் செய்தோம் தாயே!
பாருள்ளவரை உங்கள் நாமம் வாழும்! வாழும்!

***ஓம் சாந்தி..... சாந்தி.... சாந்தி ....***

**பிள்ளைகள்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அமரர்- நாகம்மா கந்தையா

தாயின் மடியில்
13.01.1921

தாய் மண்ணின் மடியில்
13.06.2018

அமரர் நாகம்மா கந்தையா அவர்களின் திதி நிர்ணய வெண்பா

"சீருறு விளம்பியாண்டு வைகாசித்திங்கள் முப்பது
பார்பெறு அமாவாசைத் திதிதன்னில்-ஊர் புகழும்
உத்தமியாம் நாகம்மா கந்தையா வெனும் சீமாட்டி
பரமனடி சென்றடைந்த நாள்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



# பஞ்சபுராணம்

## விநாயகர் துதி

திருச்சிற்றம்பலம்

ஐந்து கரத்தினை ஆனை முகத்தினை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகந்தனை ஞானக் கொழுந்தினை
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே.

## தேவாரம்

தந்தையார் போயினார் தாயாரும் போயினார்
தாமும் போவார்
கொந்தவேல் கொண்டொரு கூற்றத்தார் பார்க்கின்றார்
கொண்டுபோவார்
எந்தநாள் வாழ்வதற் கேமனம் வைத்தியா
லேழை நெஞ்சே
அந்தணா ரூர்தொழு துய்யலா மையல்கொண்
டஞ்ச னெஞ்சே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாசகம்

பால்நினைந் தூட்டும் தாயினும் சாலப்
பரிந்துநீ பாவி யேனுடைய
ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி
உலப்பிலா ஆனந்த மாய
தேனினைச் சொரிந்து புறம்புறம் திரிந்த
செல்வமே சிவபெரு மானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே.

## திருவிசைப்பா

நையாத மனத்தினை நைவிப்பான் இத்தெருவே
ஐயா நீ உலாப்போந்த அன்று முதல் இன்று வரை
கையார்த் தொழுதருவி கண்ணாரச் சொரிந்தாலும்
செய்யாயோ? அருள் கோடைத் திரைலோக்கிய சுந்தரனே.

## திருப்பல்லாண்டு

பாலுக்குப் பாலகன் வேண்டி யழுதிடப்
பாற்கடல் ஈந்தபிரான்
மாலுக்குச் சக்கரம் அன்றருள் செய்தவன்
மன்னிய தில்லைதன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற தில்லை
சிற்றம் பலமே இடமாகப்
பாலித்து நட்டம் பயிலவல் லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புராணம்

இறவாத இன்பஅன்பு வேண்டிப்பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும் நான் மகிழ்ந்துபாடி
அறவா நீ ஆடும் போதுன்னடியின் கீழ் இருக்கவென்றார்.

## திருப்புகழ்

காலனிடத்தணுகாதே காசினியிற் பிறவாதே
சீலகத்திய ஞானத் தேனமுதைத் தருவாயே
மாலயனுக் கரியானே மாதரவைப் பிரியானே
நாலுமறைப் பொருளானே நாமகிரிப் பெருமாளே.

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

திருச்சிற்றம்பலம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருக்கடவூர்

# அபிராமியம்மை பதிகம்

கலையாத குறையாத வயதும் ஓர்
கபடுவா ராதநட்பும்
கன்றாத வளமையும் குன்றாத இளமையும்
கழுபிணி இலாதஉடலும்
சலியாத மனமும் அன்பு அகலாத மனைவியும்
தவறாத சந்தானமும்
தாழாத கீர்த்தியு மாறாத வார்த்தையும்
தடைகள்வா ராதகொடையும்
தொலையாத நிதியமும் கோணாத கோலும்ஒரு
துன்பமில் லாதவாழ்வும்
துய்யநின் பாதத்தில் அன்பும்உத விப்பெரிய
தொண்டரொடு கூட்டுகண்டாய்
அலையொழி அறிதுயிலும் மாயனது தங்கையே!
ஆதிகட வூரின்வாழ்வே!
அமுதீசர் ஒருபாகம் அகலாத சுகபாணி!
அருள்வாமி! அபிராமியே! 01

காரளக பந்தியும் பந்தியின் அலங்கலும்
கரியபுரு வச்சிலைகளும்
கர்ணகுண் டலமும்மதி முகமண் டலமும்நுதற்
கத்தூரிப் பொட்டும்இட்டுக்
கூரணிந் திடுவிழியும் அமுதமொழி யும்சிறிய
கொவ்வையின் கனியதரமும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குமிழனைய நாசியும் குந்தநிகர் தந்தமும்
கோடுசோ டானகளமும்
வாரணிந் திறுமாந்த வனமுலையும் மேகலையும்
மணிநூ பரப்பாதமும்
வந்தெனது முன்னின்று மந்தகா சமுமாக
வல்வினையை மாற்றுவாயே
ஆரமணி வானிலுறை தாரகைகள் போலநிறை
ஆதிகட வூரின்வாழ்வே!
அமுதீசர் ஒருபாகம் அகலாத சுகபாணி
அருள்வாமி! அபிராமியே! 02

மகரவர் குழல்மேல் அடர்ந்துகுமிழ் மீதினில்
மறைந்துவாளைத்துறந்து
மைக்கயலை வேண்டிநின் செங்கமல விழியருள்
வரம்பெற்ற பேர்களன்றோ
செகமுழுதும் ஒற்றைத் தனிக்குடை கவித்துமேல்
சிங்கா தனத்திலுற்றுச்
செங்கோலும் மநுநீதி முறைமையும் பெற்றுமிகு
திகிரிஉல காண்டுபின்பு
புகர்முகத்து ஐரா வதப்பாக ராகநிறை
புத்தேளிர் வந்துபோற்றிப்
போகதே வேந்திரன் எனப்புகழ விண்ணில்
புலோமிசை யொடும்சுகிப்பர்
அகரமுத லாகிவளர் ஆனந்த ரூபியே!
ஆதிகட வூரின்வாழ்வே!
அமுதீசர் ஒருபாகம் அகலாத சுகபாணி!
அருள்வாமி! அபிராமியே! 03


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறிகடல்கள் ஏழையும் திகிரிஇரு நான்கையும்
மாதிரக் கரிஎட்டையும்
மாநாகம் ஆனதையும் மாமேரு என்பதையும்
மாகூர்மம் ஆனதையும் ஓர்
பொறியரவு தாங்கிவரு புவனம்ஈ ரேழையும்
புத்தேளிர் கூட்டத்தையும்
பூமகளை யும்திகிரி மாயவனை யும்அரையில்
புலியாடை உடையானையும்
முறைமுறைக ளாய்ஈன்ற முதியவ ளாய்ப்பழைமை
முறைமைதெரி யாதநின்னை
மூவுலகில் உள்ளவர்கள் வாலைஎன் றறியாமல்
மொழிகின்ற தேதுசொல்வாய்
அறிவுநிறை விழுமியர்தம் ஆனந்த வாரியே!
ஆதிகட வூரின்வாழ்வே!
அமுதீர் ஒருபாகம் அகலாத சுகபாணி!
அருள்வாமி! அபிராமியே! 04

வாடாமல் உயிரெனும் பயிர் தழைத் தோங்கிவர
அருள்மழை பொழிந்தும்இன்ப
வாரிதியி லேநின்ன தன்பெனும் சிறகால்
வருந்தாம லேயணைத்துக்
கோடாமல் வளர்சிற் றெறும்புமுதல் குஞ்சரக்
கூட்டமுத லானசீவ
கோடிகள் தமக்குப் புசிக்கும் புசிப்பினைக்
குறையாம லேகொடுத்தும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீடாழி உலகங்கள் யாவையும் நேயமாய்
நின்னுதர பந்திபூக்கும்
நின்மலீ! அகிலங்க ளுக்கன்னை என்றோதும்
நீலிஎன் றோதுவாரோ
ஆடாய நான்மறையின் வேள்வியால் ஓங்குபுகழ்
ஆதிகட வூரின்வாழ்வே!
அமுதீசர் ஒருபாகம் அகலாத சுகபாணி!
அருள்வாமி! அபிராமியே! 05

பல்குஞ் சரந்தொட் டெறும்புகடை யானதொரு
பல்லுயிர்க் குங்கல்லிடைப்
பட்டதே ரைக்கும்அன் றுற்பவித் திடுகருப்
பையுறு சீவனுக்கும்
மல்கும் சராசரப் பொருளுக்கும் இமையாத
வானவர் குழாத்தினுக்கும்
மற்றுமொரு மூவர்க்கும் யாவர்க்கும் அவரவர்
மனச்சலிப் பில்லாமலே
நல்கும் தொழிற்பெருமை உண்டா யிருந்தும்மிகு
நவநிதி உனக்கிருந்தும்
நானொருவன் வறுமையில் சிறியனா னால்அந்
நகைப்புனக் கேஅல்லவோ
அல்கலந் தும்பர்நா டளவெடுக் குஞ்சோலை
ஆதிகட வூரின்வாழ்வே!
அமுதீசர் ஒருபாகம் அகலாத சுகபாணி!
அருள்வாமி! அபிராமியே! 06



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீடுல கங்களுக்கு ஆதார மாய்நின்று
நித்தமாய் முத்திவடிவாய்
நியமமுடன் முப்பத் திரண்டறம் வளர்க்கின்ற
நீமனைவி யாய்இருந்தும்
வீடுவீ டுகள்தோறும் ஓடிப் புகுந்துகால்
வேசற்று இலச்சையும்போய்
வெண்துகில் அரைக்கணிய விதியற்று நிர்வாண
வேடமும் கொண்டுகைக்கோர்
ஓடேந்தி நாடெங்கும் உள்ளந் தளர்ந்துநின்று
உன்மத்த னாகிஅம்மா
உன்கணவன் எங்கெங்கும் ஐயம் புகுந்தேங்கி
உழல்கின்ற தேதுசொல்வாய்
ஆடுகொடி மாடமிசை மாதர்விளை யாடிவரும்
ஆதிகட வூரின்வாழ்வே!
அமுதீசர் ஒருபாகம் அகலாத சுகபாணி!
அருள்வாமி! அபிராமியே! 07

ஞானம் தழைத்துன் சொரூபத்தை அறிகின்ற
நல்லோர் இடத்தினிற்போய்
நடுவினி லிருந்துவந் தடிமையும் பூண்டவர்
நவிற்றும்உப சேதமுட்கொண்டு
ஈனந் தனைத்தள்ளி எனதுநான் எனுமானம்
இல்லாம லேதுரத்தி
இந்திரிய வாயில்களை இறுகப் பதைத்துநெஞ்சு
இருளற விளக்கேற்றியே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனந்த மானவிழி அன்னமே! உன்னைஎன்
அகத்தா மரைப்போதிலே
வைத்துவே றேகவலை யற்றுமே லுற்றபர
வசமாகி அழியாததோர்
ஆனந்த வாரிதியில் ஆழ்கின்ற தென்றுகாண்
ஆதிகட வூரின்வாழ்வே!
அமுதீசர் ஒருபாகம் அகலாத சுகபாணி!
அருள்வாமி! அபிராமியே! 08

சலதிஉ லக த்திற் சராசரங் களைஈன்ற
தாயாகி னால்எனக்குத்
தாயாகி வோயான்உன் மைந்தனன் றோஎனது
சஞ்சலம் தீர்த்துநின்றன்
முலைசுரந் தொழுகுபா லூட்டிஎன் முகத்தைஉன்
முன்தானை யால்துடைத்து
மொழிகின்ற மழலைக் குகந்துகொண் டிளநிலா
முறுவல்இன் புற்றருகில்யான்
குலவிவிளை யாடல்கொண் டருள்மழை பொழிந்தங்கை
கொட்டிவா என்றழைத்துக்
குஞ்சரமுகன்கந்த னுக்கிளையன் என்றெனைக்
கூறினால் ஈனம்உண்டோ
அலைகடலி லேதோன்றும் ஆராத அமுதமே!
ஆதிகட வூரின்வாழ்வே!
அமுதீசர் ஒருபாகம் அகலாத சுகபாணி
அருள்வாமி! அபிராமியே! 09


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைப்போது கொண்டுன் பதப்போது தன்னில்
கணப்போதும் அர்ச்சிக்கிலேன்
கண்போதி னால்உன் முகப்போது தன்னையான்
கண்டுதரி சனைபுரிகிலேன்
முப்போதில் ஒருபோதும் என்மனப் போதிலே
முன்னிஉன் ஆலயத்தின்
முன்போது வார்தமது பின்போத நினைகிலேன்
மோசமே போய்உழன்றேன்
மைப்போத தத்திற்கு நிகரெனப் போதெரு
மைக்கடா மீதேறியே
மாகோர காலன் வரும்போது தமியேன்
மனங்கலங் கித்தியங்கும்
அப்போது வந்துன் அருட்போது தந்தருள்
ஆதிகட வூரின்வாழ்வே! 10

மிகையும் துரத்தவெம் பிணியும் துரத்த
வெகுளியா னதும்துரத்த
மிடியும் துரத்தநரை திரையும் துரத்தமிகு
வேதனை களுந்துரத்தப்
பகையும் துரத்தவஞ் சனையும் துரத்தப்
பசிஎன்ப துந்துரத்தப்
பாவம் துரத்தப்பதி மோகம் துரத்தப்
பலகாரிய முந்துரத்த
நகையும் துரத்தஊழ் வினையும் துரத்த
நாளும் துரத்தவெகுவாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாவரண் டோடிகால் தளர்ந்திடும் என்னை
நமனும் துரத்துவானோ
அகிலஉல கங்கட்கும் ஆதார தெய்வமே!
ஆதிகட வூரின் வாழ்வே!
அமுதீசர் ஒருபாகம் அகலாத சுகபாணி!
அருள்வாமி! அபிராமியே! 11





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### திருக்கடவூர்

# அபிராமிய உமை பதிகம்

கங்கையொடு தும்பையும் அணிந்தவர் வியக்கும்
கலாமதியை நிகர்வதனமும்
கருணைபொழி விழிகளும் விண்முகில்கள் வெளிறெனக்
காட்டிய கருங்கூந்தலும்
சங்கையில் லாதொளிரு மாங்கல்ய தாரணம்
தங்குமணி மிடறுமிக்க
சதுர்பெருகு துங்கபா சாங்குசம் இலங்குகர
தலமும்விர லணியும்அரவும்
புங்கவர்க் கழுதருளும் மந்தர குசங்களும்
பொலியுநவ மணிநூபுரம்
பூண்டசெஞ் சேவடியை நாளும் புகழ்ந்துமே
போற்றிஎன வாழ்த்தவிடைமேல்
மங்களம் மிகுந்தநின் பதியுடன் வந்தருள்செய்
வளர்திருக் கடவூரில்வாழ்
வாமி! சுப நேமி! புகழ் நாமி! சிவ சாமிமகிழ்
வாமி! அபிராமி உமையே! 01

சந்திர சடாதரி! முகுந்தசோ தரி!துங்க
சலசலோ சனமாதவி!
சம்ப்ரம பயோதரி! சுமங்கலி! சுலட்சணி!
சாற்றருங் கருணாகரி!
அந்தரி! வராகி! சாம் பவி! அமர தோதரி!
அமலை! செ சக சாலசூத்ரி!
அகிலாத்ம காரணி! வினோதசய நாரணி!
அகண்டசின் மயபூரணி!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுந்தரி! நிரந்தரி! துரந்தரி! வரைராச
சுகுமாரி! கௌமாரி! எத்
துங்ககல் யாணி! புஷ் பாஸ்திராம் புயபாணி!
தொண்டர்கட் கருள்சர்வாணி!
அந்தரி மலர்ப்பிரம ராதிதுதி வேதவொலி
வளர்திருக் கடவூரில்வாழ்
வாமி! சுப நேமி! புகழ் நாமி! சிவ சாமிமகிழ்
வாமி! அபிராமி! உமையே 02

வாசமலர் மருவளக பாரமும் தண்கிரண
மதிமுகமும் அயில்விழிகளும்
வள்ளநிகர் முலையும்மான்நடையும்நகை மொழிகளும்
வளமுடன் கண்டுமின்னார்
பாசபந் தத்திடை மனங்கலங் கித்தினம்
பலவழியும் எண்ணிஎண்ணிப்
பழிபாவம் இன்னதென் றறியாமல் மாயப்ரப
பஞ்சவாழ் வுண்மை என்றே
ஆசைமே லிட்டுவீ ணாகநாய் போல்திரிந்
தலைவதல் லாமல்உன்றன்
அம்புயப் போதெனும் செம்பதம் துதியாத
அசடன்மேல் கருணைவருமோ
மாசிலா தோங்கிய குணாகரிழ! பவானி! சீர்
வளர்திருக் கடவூரில்வாழ்
வாமி! சுப நேமி! புகழ் நாமி! சிவ சாமிமகிழ்
வாமி! அபி ராமி! உமையே! 03

நன்றென்று தீதென்று நவிலும்இவ் விரண்டிலும்
நன்றதே உலகிலுள்ளோர்
நாடுவார் ஆதலின் நானுமே அவ்விதம்
நாடினேன் நாடினாலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றென்று சொல்லாமல் நினதுதிருவுள்ளமது
இரங்கி அருள் செய்குவாயேல்
ஏழையேன் உய்குவேன் மெய்யான மொழியி.ஃ.துன்
இதயமறியா ததுண்டோ
குன்றமெல் லாம்உறைந் தென்றுமன் பர்க்கருள்
குமாரதே வனைஅளித்த
குமரி! மர கதவருணி! விமலி!பை ரவி!கருணை
குலவுகிரி ராசபுத்ரி!
மன்றல்மிகு நந்தன வனங்கள்சிறை அளிமுரல
வளர்திருக் கடவூரில்வாழ்
வாமி! சுப நேமி! புகழ் நாமி! சிவ சாமிமகிழ்
வாமி! அபி ராமி! உமையே! 04

ஒருநாள் இரண்டுநாள் அல்லதுநான் உலகத்து
உதித்தஇந் நாள்வரைக்கும்
ஒழியாத கவலையால் தீராத இன்னல் கொண்டு
உள்ளம் தளர்ந்து மிகவும்
அருநாண் இயற்றிட்ட விற்போல் இருக்கும்இவ்
அடிமைபோல் கருணைகூர்ந்து
அஞ்சேல் எனச்சொல்லி ஆதரிப் பவர்கள்உனை
அன்றிஇலை உண்மையாக
இருநாழி கைப்போதும் வேண்டாது நிமிடத்தில்
இவ்வகில புவனத்தையும்
இயற்றி யருளும்திறம் கொண்டநீ ஏழையேன்
இன்னல்தீர்த் தருளல் அரிதோ
வருநாவ லூரர்முத லோர்பரவும் இனியபுகழ்
வளர்திருக் கடவூ ரில்வாழ்
வாமி! சுப நேமி! புகழ் நாமி! சிவ சாமிமகிழ்
வாமி! அபிராமி! உமையே! 05


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருநாள் இரண்டுநாள் அல்லதுநான் உலகத்து
உதித்தஇந் நாள்வரைக்கும்
ஒழியாத கவலையால் தீராத இன்னல் கொண்டு
உள்ளம் தளர்ந்து மிகவும்
அருநாண் இயற்றிட்ட விற்போல் இருக்கும்இவ்
அடிமைபால் கருணைகூர்ந்து
அஞ்சேல் எனச்சொல்லி ஆதரிப் பவர்கள்உனை
அன்றிஇலை உண்மையாக
இருநாழி கைப்போதும் வேண்டாது நிமிடத்தில்
இவ்வகில புவனத்தையும்
இயற்றி யருளும்திறம் கொண்டநீ ஏழையேன்
இன்னல்தீர்த் தருளல் அரிதோ
வருநாவ லூரர்முத லோர்பரவும் இனியபுகழ்
வளர்திருக் கடவுரில்வாழ்
வாமி! சுப நேமி! புகழ் நாமி! சிவ சாமிமகிழ்
வாமி! அபி ராமி! உமையே 06

எண்ணிக்கை இல்லாத துன்பங்கள் மேன்மேல்
ஏறிட் டொறுக்க அந்தோ
எவ்விதம் உளம்சகித் துய்குவேன் இப்பொழுது
எடுத்திட்ட சன்மம் இதனில்
நண்ணிஎள் ளளவுசுக மானதொரு நாளினும்
நான்அனு பவித்ததில்லை
நாடெலாம் அறியுமிது கேட்பதேன் நின்னுளமும்
நன்றாய் அறிந்திருக்கும்
புண்ணியம் பூர்வசன னத்தினில் செய்யாத
புலையனா னாலும் நினது
பூரண கடாட்சவீட் சண்ணியம் செய்தெனது
புன்மையை அகற்றியருள்வாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண்ணவர்கள் விண்ணவர்கள் நித்தமும் பரவுமிசை
வளர்திருக் கடவூரில்வாழ்
வாமி! சுப நேமி! புகழ் நாமி! சிவ சாமிமகிழ்
வாமி! அபி ராமி! உமையே! 07

தெரிந்தோ அலாது தெரியாமலோ இவ்வடிமை
செய்திட்ட பிழை இருந்தால்
சினங்கொண்டதோர் கணக் காகவை யாதுநின்
திருவுளம் இரங்கி மிகவும்
பரிந்துவந் தினியேனும் பாழ்வினையில் ஆழ்ந்தினல்
படாதுநல் வரம் அளித்துப்
பாதுகாத் தருள் செய்ய வேண்டும் அண்டாள் உயிர்
பரிவுடளன் அளித்த முதல்வி!
புரந்தரன் போதன்மா தேவன் ஆதி யோர்கள்துதி
புரியும் பாதாம்புய மலர்ப்
புங்கவி! புராந்தரி! புரந்தகி! புராதனி!
புராணி! திரிபுவனேசுவரி!
மருந்தினும் நயந்தசொற் பைங்கிளி! வராகி! எழில்
வளர்திருக் கடவூரில் வாழ்
வாமி! சுப நேமி! புகழ் நாமி! சிவ சாமிமகிழ்
வாமி! அபிராமி! உடையே! 08

வஞ்சகக் கொடியோர்கள் நட்பு வேண்டாமலும்
மருந்தினுக் காவேண்டினும்
மறந்தும் ஓர் பொய்ம் மொழி சொல்லாமலும் தீமையாம்
வழியினிற் செல்லாமலும்
விஞ்சுநெஞ் சதனிற் பொறாமைதரியாமலும்
வீண் வம்பு புரியாமலும்
மிக்கபெரி யோர்கள் சொலும் வார்த்தை தள்ளாமலும்
வெகுளியவை கொள்ளாமலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தஞ்சமென நினது உபய கஞ்சம் துதித்திடத்
தமியேனுக் கருள் புரிந்து
சர்வகாலமும் எனைக் காத்தருள வேண்டினேன்
சலக்கயல்கள் விழியை அனைய
வஞ்சியர் செவ்வாய் நிகருவாவி ஆம் பல்மலரும்
வளர்திருக் கடவூரில் வாழ்
வாமி! சுப நேமி! புகழ் நாமி! சிவ சாமி மகிழ்
வாமி! அபிராமி! உமையே! 09

எனதின்னல் இன்னபடி என்றுவே றொருவர்க்கு
இசைத்திடவும் அவர்கள் கேட்டிவ்
இன்னல் தீர்த்துள்ளத் திரங்கி நன்மைகள் செயவும்
எள்ளளவும் முடியாது நின்
உனதம்மரு வுங்கடைக்கண்ணருள் சிறிது செயின்
உதவாத நுண்மணல்களும்
ஓங்குமாற்றுயர் சொர்ண மலையாகும் அதுவன்றி
உயரகில புவனங்களைக்
கனமுடன் அளித்து முப்பத்திரண்டறங்களும்
கவின் பெறச் செய்யும் நின்னைக்
கருது நல்லடியவர்க் கெளிவந்து சடுதியில்
காத்துரட் சித்ததோர்ந்து
வனசநிகர் நின்பாதம் நம்பினேன் வந்தருள் செய்
வளர்திருக் கடவூரில் வாழ்
வாமி! சுப நேமி! புகழ் நாமி! சிவ சாமி மகிழ்
வாமி! அபிராமி! உமையே! 10

கருநீல வடிவமார் மாடேறி உத்தண்ட
கனதண்ட வெம்பாசமும்
கைக்கொண்டு சண்டமா காலன்முன் எதிர்க்க மார்க்
கண்டன் வெருண்டு நோக்க


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருநீல கண்டன் எனும் நின்பதியை உள்ளத்தில்
இன்பு கொண்டருச்சனை செய
ஈசன் அவ் இலிங்கம் பிளப்பநின் னொடு தோன்றி
யமனைச்சூலத்திலூன்றிப்
பெருநீல மலை என நிலத்தில் அன்னவன் விழப்
பிறங்குதா ளால் உதைத்துப்
பேசுமுனி மைந்தனுக் கருள் செய்த துனதரிய
பேரருளின் வண்ணமலவோ
வருநீல மடதார் விழி என்ன மலர்வாவி
வளர் திருக் கடவூரில் வாழ்
வாமி! சுப நேமி! புகழ் நாமி! சிவ சாமி மகிழ்
வாமி! அபிராமி! உமையே! 11

சகல செல்வங்களும் தரும் இமய கிரிராச
தனயை! மாதேவி! நின்னைச்
சத்யமாய் நித்யம் உள்ளத்தில் துதிக்கும் உத்
தமருக்கு இரங்கி மிகவும்
அகிலமதில் நோயின்மை கல்வி தன தானியம்
அழகு புகழ் பெருமை இளமை
அறிவுசந்தானம் வலி துணிவு வாழ் நாள் வெற்றி
ஆகநல் லூழ் நுகர்ச்சி
தொகைதரும் பதினாறு பேறும் தந்தருளி நீ
சுகானந்த வாழ்வளிப்பாய்
சுகிர்தகுண சாலி! பரி பாலி! அநு கூலி! திரி
சூலி! மங்கள விசாலி!
மகவுநான் நீதாய் அளிக்கொணா தோமகிமை
வளர் திருக் கடவூரில் வாழ்
வாமி! சுபநேமி! புகழ்நாமி! சிவசாமி மகிழ்
வாமி! அபிராமி! உமையே! 12


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலங்கரை விளக்கமாகத் திகழ்ந்த செந்தமிழ்ச்செல்வி

திருவாளர் கார்த்திகேசு திருமதி தங்கம் இருவருக்கும் இரண்டாவது மகளாக 13.01.1921ஆம் ஆண்டு கோப்பாய் தெற்கு கட்டைப் பிராய் என்னும் கிராமத்தில் சைவ வேளாளர் குலத்தில் அவதரித்தார். நாகம்மா என்று நாமமிட்டு செல்லமாக வளர்க்கப் பட்டார். எதிர்பாராமல் இவரது தந்தையார் நோய்வாய்ப்பட்டு இவரது பத்தாவது வயதில் இறைபதம் எய்தினார். அதன் காரணமாக குடும்பம் மிகவும் கஷ்டநிலைக்கு உள்ளானது. எனவே படிப்பை ஆறாம் வகுப்புடன் நிறுத்தி வீட்டு நிர்வாகத்தை தாயாருடன் இணைந்து இன்னல்களுக்கு மத்தியிலும் முன் னெடுத்துச் சென்றார். அந்தக் காலத்தில் மிகவும் இளமையில் பதினாறு வயதில் பெரியோரால் தீர்மானித்து திருமணம் நடத்தப் பட்டது. அதன்பின் அம்மா,

'பெறுமவற்றுள் யாமறிவது இல்லை
அறிவறிந்த மக்கட்பேறு அல்ல பிற'.

என்ற வள்ளுவர் வாக்கிற்கிணங்க எம்மில் பத்து நன்மக்கள் குடியிருந்த கோயிலாகினார். ஏழு ஆண் முத்துக்களையும் மூன்று பெண் வைரங்களையும் இப்புவியில் பெற்றெடுத்த பெரு மகளானார். பத்து பேரும் திருமணமாகி இருபது பேரானார்கள், அவர்கள் மூலம் இருபத்தெட்டு சிறப்பான பேரப்பிள்ளைகளைப் பார்த்து பரவசப்பட்டார். அவர்களின் வாரிசுகளாக முப்பத்து மூன்று பூட்டப்பிள்ளைகளைப் பார்த்து பூரிப்புடன் வாழ்ந்து வந்தார்.

மிகப் பெரிய ஆலவிருட்சமான அவரிலிருந்து எண்பதுக்கும் மேற்பட்ட வாரிசுகள் இன்று பல்வேறுபட்ட துறைகளில் கல்வி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயின்று எல்லோரும் போற்றும் கல்விமான்களாக நாட்டிற்கு நற்சேவைகள் புரியும் திறமைசாலிகளாக வாழ்வதைப் பார்த்துப் பார்த்துப் பூரித்து தொன்னூற்றெட்டாண்டுகள் இந்தப் புண்ணிய பூமியில் வாழ்ந்தார். இல்லறம், நல்லறம் ஆகிய வாழ்வுகளை முழுமையாக வாழ்ந்து முடித்த உத்தமியானார். நான்கு தலை முறைகளைக் கண்டு களிப்புடன் இத்தரணியில் கலங்கரை விளக்கமாகத் திகழ்ந்த செந்தமிழ்ச்செல்வி.

அன்பு, பாசம், நீதி, நேர்மை அத்தனைக்கும் இலக்கணமாகத் திகழ்ந்த அம்மா!

நன்மக்களைப் பெற்ற மகராசியே!
அன்பின் அணிகலனே! நட்பின் செல்வியே!
பக்தியின் பரம்பொருளே அம்மா!

அவரின் ஆத்மா அவரை விட்டு விலகும்வேளை இறைவன் அவரை தன்னுடன் அணைத்துக்கொண்டார். மிகமிக அமைதி யாக அம்மா இறைபதம் எய்தியது எமக்கு மலைப்பாக இருந்தது. என்றும் இறைவன் தன்னகத்தே உம்மை அணைத்து முழுமையாக இறைபதம் அடைய வேண்டுகிறேன்.

நூறுஆண்டுகள் அம்மா இத்தரணியில் வாழ்வா என்று எண்ணி யிருந்தோம். ஆனால் இறைவனின் அழைப்பு இரண்டு ஆண்டுகள் முந்திவிட்டது. வாழ்க்கை என்பது ஒருமுறைதான். அதை வாழ் வாங்கு வாழ்ந்து முடித்த உங்களுக்கு எம் குடும்பத்தவரின் கோடி வணக்கங்கள்.

ஓம் சாந்தி ஓம் சாந்தி ஓம் சாந்தி

**மகள்**
**மலர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்மாவின் கருவறை எம்முடன் தமிழ் பேசியது

அம்மா ஓர் கஷ்டமான குடும்பத்தில் முதலாவது பெண் பிள்ளையாகப் பிறந்தார். அம்மப்பா அம்மாவிற்குப் பத்து வயதாக இருக்கும்போது காலமானதைத் தொடர்ந்து அம்மாவின் படிப்பு ஆறாம் வகுப்புடன் இடைநிறுத்தப்பட்டு குடும்ப பாரம் அம்மாவின் தலைக்கு வந்தது. அன்று தொடக்கம் அம்மாவின் வாழ்க்கை சமையல் கலையுடனே தொடர்ந்தது. தனது பதினாறாவது வயதில் தனது மைத்துனரை மணந்து அடுத்தகட்ட வாழ்க்கைப் பயணத்தை ஆரம்பித்தார்.

இன்றைய பெண்கள் போலன்றி, கணவருக்கு ஏற்ற மனைவி யாக, வரவிற்கு ஏற்ற செலவோடு, வாழ்க்கையைத் திறம்பட நடாத்துகின்ற குடும்பத் தலைவியாக வாழ்ந்தார். ஐயாவும் தனது வருவாயை அம்மாவிடம் கொடுக்க வாழ்க்கைப் பயணம் ஓரளவு நிம்மதியுடன் ஓடியது.

இக்கால கட்டத்தில் பத்து பிள்ளைகளையும் பெற்று கஷ்டத் தின் மத்தியிலும் பிள்ளைகளை வளர்த்து வந்தார். ஆரம்பத்தில் ஐயா பணவசதி படைத்திருந்தும் அவரது கொடைப்பண்பாலும் பிள்ளைகளுக்கான செலவாலும் வரத்தகத்தில் அவருக்கு ஏற்பட்ட இழப்பாலும் (பலர் அவருக்குக் கொடுக்க வேண்டிய தொகையைத் திரும்பச் செலுத்தவில்லை) அவர் செய்துவந்த புகையிலை வியாபாரத் தொழிலைக் கைவிட்டு விவசாயத்தில் ஈடுபட்டார்.

விவசாயத்தின் ஆரம்பமாக 1950களில் உருத்திரபுரம் குடி யேற்றத் திட்டத்தில் அவரும் ஒரு காணியைப் பெற்று குடும்பத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துடன் குடியேறினார். அங்கு அம்மா, ஐயா ஆகிய இருவரின் முயற்சியாலும் விவசாயத்தில் முன்னேறினர். மேட்டுக்காணியை பயன்தரும் பூமியாக மாற்றிய பெரும்பங்கு அம்மாவிற்கு உண்டு. எமது ஆரம்பக் கல்வி உருத்திரபுரத்திலேயே இருந்தது. விவசா யத்தில் அம்மா, அப்பாவிற்கு உறுதுணையாக நாங்களும் இருந்து வந்தோம். கஷ்டங்கள் மத்தியில் வாழ்ந்தபோதும் எமது உயர்கல்வியைத் தொடர்வதற்காக நாம் மீண்டும் யாழ்ப்பாணம் வரவேண்டியேற்பட்டது.

எமது படிப்பிற்காக அம்மாவும் நாமும் யாழ்ப்பாணம் செல்ல, ஐயா தொடர்ந்தும் விவசாயத்தில் ஈடுபட்டு வந்தார். அம்மாவும் தனது முயற்சியினூடாக சிறுபணத்தைச் சம்பாதித்து ஐயாவின் உதவியுடன் எம்மை தொடர்ந்து படிக்க வைத்தார்.

இக்காலகட்டத்தில் விசுவமடுவில் எனக்குக் கிடைத்த படித்த வாலிபர் திட்ட காணியில் எனது தந்தையாரும் அம்மாவும் தமது விவசாயப் பணிகளைத் தொடர்ந்தனர். அதற்கான நிதியுதவி களை நான் இயன்றவரை கவனித்துக்கொண்டேன்.

அம்மாவின் குடும்பத்தலைவி என்ற பாகம் ஈழப்போராட்டம் நடக்கும்வரை அமைந்தது. அதன் பின் பிள்ளைகள் சிறு பொறுப் புக்களை ஏற்றுக்கொண்டனர். பிள்ளைகளில் பலர் அரசியல் வாழ்க்கையையும் தொடர்ந்தனர்.

அம்மாவின் ஆரம்ப காலத்தில் அவர் மிகவும் ஒரு அழகிய பெண்ணாக எமது கட்டைப்பிராய் கிராமத்தில் உலா வந்தார். பிற்காலத்தில் பத்து பிள்ளைகளைப் பெற்ற மகராசியானார். அம்மாவின் கடைசிக்காலம் 'நாளை என்பது நமக்கேது' என்பது போலவே அம்மாவின் வாழ்நாட்கள் நகர்ந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது வாழ்க்கையில் அம்மாவின் பங்கு என்பது அளவிட முடியாதது. எங்கள் ஒவ்வொருவரது வாழ்வும் அவரால் செதுக்கப்பட்டது. எங்களது சிந்தனை, செயற்பாடுகள், இனம், மொழி மேல் கொண்ட பற்றுக்கள் அனைத்தும் அம்மாவின் கருவறையிலிருந்தே எம்மைப் பற்றிக்கொண்டன.

அம்மாவின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றேன்.

**மகன்**
**மனோ**






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமரர் நாகம்மா கந்தையா அவர்களும் பிள்ளைகளும்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான் குடியிருந்த கோயில்

பத்துமாதம் சுமந்து இந்தப் புண்ணிய பூமியில் என்னை அவதரிக்க வைத்த தெய்வமே, அம்மா நீங்கள் நூறு ஆண்டுகள் காலம் எம்முடன் வாழ்வீர்கள், நூறாவது ஆண்டு நிறைவை விழா எடுத்துக் கொண்டாட ஆசைப்பட்டேன். ஆனால் இறைவன் உங்கள் கணக்கை சிறிது சுருக்கிவிட்டார்.

அம்மா உங்களைப் பற்றி எழுத ஆயிரம் விடயங்கள் உண்டு. ஆனால் எழுத முடியவில்லை. துக்கம் என் தொண்டையை அடைக்கிறது. அம்மா உங்களால் யாரையும் வெறுத்து ஒதுக்க முடியாது. சாந்தமான குணமென்று சொல்வதானால் அதற்கு நிகர் நீங்கள்தான். உங்கள் நடையழகு அது ஒரு தனியழகு. உங்களது நடையழகால் மணவறை நடை நாகம்மா என்ற சிறப்புப் பெயரையும் பெற்றீர்கள். அவ்வளவு அமைதியான மெது வான நடை. எனக்குத் தெரிய அம்மாவின் தொன்னூற்றெட்டு வருட வாழ்வில் யாரும் குற்றம் குறை கூறியதில்லை.

அம்மா உங்கள் விருப்பப்படி உங்கள் பிள்ளைகள், பேரப் பிள்ளைகள் அனைவரும் கல்வியைச் சிறப்புடன் கற்று ஆசிரியர் களாகவும், சமூகச் செயற்பாட்டாளர்களாகவும், மருத்துவர்களா கவும், பொறியியலாளர்களாகவும், கணக்காளர்களாகவும் சிறப்புற வாழ்வதைப் பார்த்து அகமகிழ்ந்தீர்கள். அம்மா உங்கள் இறுதிக்காலத்தில் நாம் வெளிநாடுகளில் ஒவ்வொருநாளும் உங் களுடன் சேர்ந்து வாழமுடியவில்லையே என்ற ஏக்கத்துடன்தான் வாழ்ந்தேன். இருந்தாலும் தம்பிமார் இருவரும் உங்களை அன்புடன் அரவணைத்து பார்த்துக்கொண்டதினால் நிம்மதியுடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்தேன். நீங்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட செய்திகேட்டு ஓடிவந்தேன். உங்களைப் பார்த்து தடவி ஸ்பரி சித்த பின்புதான் என் மனம் ஆறுதல் பெற்றது. உங்கள் உயிர் இம்மண்ணைவிட்டுப் பிரியும்வரை நான் உங்களை விட்டுப் பிரியாதிருந்தேன். இறுதியில் பத்து நாட்களாக என்னால் முடிந்த பணிவிடைகளை உங்களுக்குச் செய்வதற்கு குறைந்தபட்சம் ஆண்டவன் எனக்கு அருள் புரிந்தமைக்கு நன்றியுடையவளாக இருக்கிறேன்.

நானும் எனது மூத்த சகோதரியும் ஏனைய மருமக்களும் உறவினர்களும் இணைந்து உங்களுக்குப் பணிவிடை செய் தமையானது எமக்கு மனத்திருப்தியை அளிக்கின்றது. ஆனால் அந்த பத்துநாட்களில் ஒருமுறையாவது கண்விழிக்க வேண்டும் பேச வேண்டும் என எதிர்பார்த்துக் காத்திருந்தேன். ஆனால் அது நடக்கவில்லை. எம்மை விட்டுப் பிரிந்தாலும் விண்ணுலகில் ஐயாவுடனும், அண்ணாக்களான அம்பிகைபாகன், தங்கராசா, செல்வநாயகம் ஆகியோர்களுடனும் பாப்பா அக்காவுடனும் நீங்கள் சிவப்பேற்றை அடைவீர்களென்ற நம்பிக்கையுடன் ஆண்டவனைப் பிரார்த்திக்கிறேன்.

**அன்புமகள்**
**சிறி**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்த்தாயின் மகள் அம்மா
# ஒரு சதாப்தம்

தமிழ்த் தாயின் மூத்த புதல்விகளில் ஒருவரும் பத்து பிள்ளைகளை நூறுமாதம் சுமந்து பெற்றெடுத்த மகராசியுமான எமது அன்னை அமரர் நாகம்மா கந்தையா அவர்கள் 13.06.2018 அன்று சிவபதம் அடைந்தார். 13.01.1921இல் பிறந்து இப்பூவுல கில் தொன்னூற்றெட்டு வருடங்கள் வாழ்ந்த எமது அன்னை தாண்டிவந்த படிக்கட்டுக்கள் ஏராளம். அது ஏறத்தாழ ஒரு நூற்றாண்டுகால வரலாறு.

திருமதி நாகம்மா அவர்கள் தனது பத்தாவது வயதிலேயே தந்தையாரை இழந்துவிட்டார். ஐந்து சகோதர சகோதரிகளைக் கொண்ட குடும்பத்தில் இரண்டாவதாகவும் பெண்பிள்ளையா கவும் எமது அன்னை இருந்ததால் தந்தையின் செல்லப் பிள்ளையாகவே அவர் வளர்ந்தார். ஆனால் துரதிருஷ்ட வசமாக அவரது தந்தை காலமானதைத் தொடர்ந்து அவரது பாட சாலைக் கல்வியானது ஆறாம் வகுப்புடன் முடிவிற்கு வந்தது.

குடும்பத்தின் ஐந்து பிள்ளைகளை வளர்க்க வேண்டிய முழுப் பொறுப்பும் எமது அம்மாவின் தாயாரிடம் (ஆச்சி) போய்ச் சேர்ந்தது. அவரால் எல்லோரையும் படிக்க வைக்க முடிய வில்லை. எமது அன்னை தான் மூன்றாம் வகுப்பிலிருந்து நான் காம் வகுப்பு படிக்காமலேயே ஐந்தாம் வகுப்பிற்கு வகுப்பேற்றம் செய்யப்பட்டதாகப் பெருமையுடன் கூறுவார்.

குடும்ப வறுமை மற்றும் சுமையின் காரணமாக பதினாறு வயதினேலேயே அம்மாவிற்குத் திருமணம் முடித்து வைத் தார்கள். எமது மூத்த அண்ணன் அம்பிகைபாகன் அவர்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

13.06.1938. பெற்றெடுத்தார். அண்ணாவின் பிறந்ததினமான அதே 13ஆம் திகதி அம்மா காலமானார். அண்ணா இளவயதிலேயே இயற்கையெய்தினார். அம்மாவின் தொன்னூற்றெட்டு வருட கால வாழ்க்கையே போதுமானது, அவர் தனது இறுதி நாட்களில் துன்பத்தைத் தாங்கக்கூடாது என்பதாலோ என்னவோ தான் பிறந்த தினத்திலேயே அம்மாவையும் அழைத்துக்கொண்டார்.

ஒரு விவசாயியின் மனைவியாக, பத்து பிள்ளைகளின் தாயாக எங்களை வளர்ப்பதற்கு அவர் பட்ட கஷ்டங்கள், துன்பங்கள், அனுபவித்த இன்னல்கள் சாதாரணமானதல்ல. எமது தந்தை ஒரு சிறிய விவசாயியாக இருந்த காரணத்தினால் விவசாயம் பெரும் இலாபமீட்டும் தொழிலாகவும் இருந்ததில்லை. யாழ்ப்பாணம் கட்டைப்பிராய் என்னும் அவர்களது பூர்வீக நிலத்திலிருந்து 1950களில் கிளிநொச்சி, உருத்திரபுரத்திற்கு இடம் பெயர்ந்து, அரசு கொடுத்த வயலிலும், காணியிலும் தமது வாழ்க்கையைத் தொடர்ந்தனர். அன்றைய நாளில் அந்தக் கிராமத்திற்குப் போக்குவரத்து வசதிகள் இல்லை. வைத்திய சாலை இல்லை. சுற்றிவர அடர்ந்த காடு. கோடைகாலங்களில் குடிநீர் பிரச்சினை. இவ்வளவு இன்னல்களுக்கெதிராக எதிர் நீச்சல் போட்டே எமது தாய் எம் எல்லோரையும் படிக்கவைத்து கல்விமான்களாக்கினார்.

தபாலதிபராகவும், பொறியியலாளர்களாகவும், பட்டதாரிகளாகவும் அரசியல் ஆய்வாளர்களாக கலாநிதி பட்டம் பெற்றவர்களாகவும் சமூக அக்கறை கொண்டவர்களாகவும் மொழிமீதும் இனம்மீதும் பற்றுக்கொண்டவர்களாகவும் அவற்றுக்காகப் போராடும் துணிச்சலைக் கொண்டவர்களாகவும் எமது தாயார் தமது பிள்ளைகளை வளர்த்தெடுத்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வறுமையில் வாழ்ந்தபோதிலும் ஆறாம் வகுப்புவரையில் மட்டுமே பாடசாலையில் கல்வி கற்றபோதிலும் அம்மா தமிழ் மொழிமேல் கொண்ட பற்றுதலும் அக்கறையும் அதீதமானது. அதனால்தானோ என்னவோ குடும்பத்தில் அனைவருமே இன உணர்வும் மொழிப்பற்றும் உள்ளவர்களாக வளர்ந்தார்கள். தமிழ் வரலாற்று நாவல்களை அம்மா பெருவிருப்புடன் வாசித்தார். அப்புத்தகங்களை அண்ணாக்களின் மூலம் தேடித்தேடி வாங்கி வாசிப்பார். அவர் எண்பது வயதை எட்டும்வரை தனது வாசிப்புப் பழக்கத்தை நிறுத்தியதில்லை. வீட்டுக்கு வரவழைக்கும் சகல புதினப் பத்திரிகைகளையும் சில சிமயங்களில் அவரே முதலில் வாசிப்பவராகவும் இருந்தார்.

அம்மா வெறும் வாசிப்புடன் நின்றுவிடுவதில்லை. அந்தக் கதைகளையோ செய்திகளையோ தனது அயலவர்களுடன் பகிர்ந்துகொள்வதில் வல்லவராகவும் இருந்தார். உருத்திரபுர கிராமத்தின் நிலாவெளிச்சத்திலும் கைவிளக்கின் ஒளியிலும் அம்மா அயலவர்களுடன் பகிர்ந்துகொண்ட கதைகள் ஏராளம். வானொலி இல்லாத, தொலைக்காட்சி இல்லாத பத்திரிகை வராத காட்டுப்பக்கக் குக்கிராமங்களில் அம்மாவின் கதைக்கென பல இரசிகர்கள் உண்டு. சில சமயங்களில் இரவு பத்து மணியை தாண்டியும் இக்கதை சொல்லும் படலம் தொடரும்.

ஆரம்ப காலங்களில் அம்மாவின் குடும்ப பரியாரியாரான கல்வியங்காட்டிலிருந்த இரத்தினசபாபதி பரியாரியாரிடம் தனக்கோ பிள்ளைகளுக்கோ மருந்தெடுக்கப் போகின்றபோது அவர்களுக்கு மாத்திரமல்லாமல், உருத்திரபுரத்தில் தனது கிராமத்தில் வசிக்கக்கூடிய மக்களுக்கு ஏற்படக்கூடிய நோய்களுக்கும் இரத்தினசபாபதிப் பரியாரியாரிடம் மருந்துவாங்கிச் சென்று அவ்வப்போது வழங்கிய விடயங்களையும் அம்மா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்களுக்குச் சொன்னதுண்டு. இரத்தினசபாபதிப் பரியாரும்கூட எந்தவிதக் கட்டணமுமின்றி இம்மருந்துகளை அம்மாவிற்குக் கொடுத்து வந்ததையும் அம்மா அவர் தொடர்பில் சிலாகித்து பேசியதும் உண்டு.

சிறியவீடு, பெரிய காணி. பின்னாலும் முன்னாலும் பெரிய முற்றங்கள், மா, பலா, எலுமிச்சை, தோடை, புளி என வகை வகையான மரங்கள் வீட்டிற்கு முன்னால் அழகிய பூந்தோட்டம், நீண்ட வேலிகள், பூவரசு, பாவட்டை, சீமைக்கிளுவை, முள் முருங்கை என வேலியெங்கும் வகைவகையான மரங்கள். தென்னை, பனை, முருங்கை என காணியெங்கும் சோலைகளாக அது ஒரு அழகிய வீடாகவும், அழகிய தோட்டமாகவும் இருந்தது. இவை எல்லாமே அம்மாவின் கைவண்ணங்கள். ஆடு களும், மாடுகளும் மேய்ச்சல் முடிந்து பட்டிக்குத் திரும்பும்போது ஏற்படும் புழுதிவாசனை, தமிழர் திருநாளாம் தைப்பொங் கலுக்குப் பின்னர் வரும் மாட்டுப்பொங்கலுக்கு அம்மா, அப்பா கொடுக்கும் முக்கியத்துவம், அதன் சிறப்பு இவைகளையெல் லாம் வார்த்தைகளில் சொல்ல முடியாது. பட்டிப்பொங்கலின் பின் குங்குமத்துடனும் மாலைகளுடனும் அடுத்தநாள் மேய்ச் சலுக்குப் போகும்போது அந்த மாடுகளைப் பார்ப்பதும் ஒரு அலாதியான அழகுதான். இவ்வாறு எங்களுக்கு எமது பண் பாட்டையும் கலாசாரத்தையும் மண்வாசனையுடன் எமக்குக் கற்றுக்கொடுத்தவர் எமது தாயார்.

தமிழ்மொழிமேல் கொண்ட பற்றுதலால் தந்தை செல்வாமீதும் தமிழரசுக் கட்சிமீதும் இவர் ஆழ்ந்த பற்றுக் கொண்டிருந்தார். அவர் தந்தை செல்வாவைப் பெயர் சொல்லி அழைத்ததில்லை. கிழவன் என்று அன்புரிமையுடன் அழைத்தார். அந்தக் கிழவனின் மேல் அதீத நம்பிக்கையும் வைத்திருந்தார். தமிழரசுக் கட்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிளிநொச்சியில் நடாத்திய மகாநாட்டைப் பார்ப்பதற்காக உருத்திரபுரத்திலிருந்து கிளிநொச்சிக்கு ஐந்துமைல்தூரம் நடந்து சென்று அதனைப் பார்த்திருக்கின்றார். அப்பொழுது தனது வயிற்றில் கருவாகி வளர்ந்துவந்த தனது ஒன்பதாவது புத்திரனான எனக்கு மசூர்மௌலானா போன்றவர்களின் வீரமிக்க பேச்சுக்களைக் கேட்டபின் செந்தமிழ்த்தொண்டன் என்ற பெயரை வைத்து மகிழ்ந்தார் என்பதும் வேறுகதை.

எமது கிராமமான கட்டைப்பிராயில் கலைமணி சனசமூக நிலையம் என்ற பெயரில் இன்றும் ஒரு வாசிகசாலை இயங்கி வருகிறது. 1940களில் அதனை உருவாக்குவதற்கு வீடுவீடாகச் சென்று நிதி சேகரித்ததையும் அந்த சிறிய கட்டடத்தைக் கட்ட கிராம இளைஞர்கள் எடுத்த முயற்சிகளுக்கு எமது தாயார் போன்றோர்களின் பங்களிப்பும் இன்றைய இளைஞர் யுவதிகள் கற்றுக்கொள்ள வேண்டிய பாடங்களாகும்.

யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற சத்தியாகிரகங்களிலும் உண்ணாவிரதங்களிலும் அம்மா தொடர்ச்சியாகப் பங்குபற்றி வந்தார். எமது கிராமத்தில் அம்மா மாத்திரமே கூடுதலாக இவ்வாறான நடவடிக்கைகளில் ஈடுபட்டுவந்தார். எமது போராட் டம் ஒரு ஆயுதப் போராட்டமாக திசை திரும்பியபோதும் அதனை யும் அவர் ஆதரித்தார். வரும் இளைஞர்கள் எல்லோரையும் இன்முகத்துடன் வரவேற்று உணவளித்தார். சாதி, மதம் பாரா மல் எல்லோரையும் தனது பிள்ளைகளாக அவர் வரவேற்ற தென்பது எல்லோரும் அறிந்த விடயம்.

நாட்டில் ஏற்பட்ட இராணுவ அடக்குமுறையின் காரணமாக அம்மா சில காலம் சென்னையில் வாழ்ந்தார். அந்த நாட்களில் தன் வீட்டிற்கு வரும் தோழர்களுக்கு தன்கையால் சமைத்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணவை ஒரே பாத்திரத்தில் இட்டு குழைத்து அனைவருக்கும் உருட்டி உருட்டி தனது தாய்ப்பாசத்தையும் சேர்த்து அவரவர் உள்ளங்கையில் திணிப்பார். யாரும் ஒரு உருண்டையுடன் எழுந்து சென்றுவிட முடியாது.

அம்மாவின் மொழிப்பற்றும் இனப்பற்றும் போராட்ட குணமும் எமது குடும்பத்தில் ஒவ்வொருவரையும் துணிச்சல் மிக்கவரா கவும், போராட்டகுணம் மிக்கவர்களாகவும் ஆக்கியது மாத்திர மல்லாமல் எல்லோரையும் மனிதர்களாக்கியது என்பதையும் நான் குறிப்பிட வேண்டும். எல்லாக் குடும்பத்தையும்போல் எமது குடும்பத்திற்குள்ளும் பல பலவீனங்கள் இருந்தாலும் அம்மாவின் தைரியம், துணிச்சல், முற்போக்கு சிந்தனை அனைத்தையும் குறித்து, பிள்ளைகள் நாமனைவரும் பெருமையடைகின்றோம்.

ஆலம் விருட்சம்போல் பத்துப் பிள்ளைகளைப் பெற்று, பேரப்பிள்ளைகள், கொள்ளுப் பேரர்கள் என ஒருசேனை வாரிசு களுடன் வாழ்ந்து எல்லோரையும் வாழவைத்து எமது கிராமத் தின் மூத்த பெண்மணியாகத் திகழ்ந்த எமது தாயார் பூரண வாழ்வு வாழ்ந்து சிவபதம் அடைந்தார். அவரது வயிற்றில் பிறந்ததற்காக நாம் பெருமையடைகிறோம்.

அன்னாரின் இறுதிச்சடங்கில் ஏராளமானவர்கள் கலந்துகொண்டு அம்மா தங்களுக்குச் செய்த உதவிகளையும், உபசரிப்புக்களையும் பரிமாறிக்கொண்டபோது வலக்கை கொடுப்பதை இடக்கை அறியாத அவரது உயரிய பண்பு எம்மை மெய்சிலிர்க்க வைத்தது.

**மகன்**

**செந்தமிழ்த்தொண்டன்**

**சுரேஷ். க. பிரேமச்சந்திரன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தன்னுள் என்னைச் சுமந்த என்தாயை – என்னுள் சுமக்கின்றேன்......!

மனிதர்கள் மட்டுமன்றி எல்லா உயிரினங்களுக்கும் தாய் என்பது தனித்துவமானதும் மகத்துவமானதுமாகும். தாய்மைக்கு ஒப்பிட உலகில் வேறெந்த உறவும் இல்லை என்பதனால் தான் எல்லா மொழி இலக்கியங்களிலும் அவர்கள் வாழ்க்கையிலும் தாய்மை என்பதும் தாய் என்பவரின் நிலையும் ஒப்புயர்வற்ற ஒன்றாகவே போற்றப்படுகிறது. ஒவ்வோர் தாயும் ஏதேனும் சில பண்புகளில் பிள்ளைகளின் மனதில் மாறா இடம் பிடித்திருப்பர்.

என் தாயுடன் என் வாழ்க்கை அரைநூற்றாண்டு காலம் சுமார் ஐம்பது ஆண்டு காலமாக அனுபவித்த பாசத்தை, நேசத்தை, வழிகாட்டுதலை, அவ்வவ்போது வெளிக்காட்டிய கோபத்தைச் சில வார்த்தைகளில் சில நிமிடங்களில் வடித்துவிடமுடியாது. அம்மாவின் பள்ளிப் படிப்பு ஆறு வரை ஆயினும் 98 வயது வரைக்கும் கூட படித்துக்கொண்டிருந்தவர். மிகுந்த புத்தகப் பிரியர் சிறந்த நாவல்களைத் தேடிப்படிக்கும் பழக்கம் எழுபது வயதுக்கு மேலும் இருந்தது. நாங்கள் பாடசாலையில் படித்துக் கொண்டிருந்த காலத்தில் வீட்டுவேலைகள் முடித்து இரவு தொடங்கி அதிகாலை 2, 3 மணிவரைகூட கைவிளக்கில் படிப் பார். வாராந்த,தினசரி பத்திரிகைகள், சஞ்சிகைகள் போன்ற வற்றை எப்போதும் வாசிப்பார்.

இதனால் அவருடைய உலக அறிவும்,இலங்கை அரசியல் அறிவும் குறிப்பாகத் தமிழ் அரசியல் போக்குகளை எடை போடவும், பெறுமதி மிக்க கருத்துக்களை எங்களுடன் பகிரவும் ஆற்றல் பெற்றிருந்தார். என்பார்வையில் அவரிடம் சிறந்த ஞானம் (Wisdom) இருந்தது. வாசிப்பதால் மனிதன் பூரணமடை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கின்றான் என்ற முதுமொழிக்கு என்தாயையே உதாரணமாகப் பார்க்கின்றேன்.

75 வயதுக்கு மேல், ஓவியங்கள் வரைவதில் அதிக ஈடுபாடு கொண்டவராக இருந்தார். எப்போதும் சும்மா இருப்பதை அவர் விரும்பியதில்லை. ஏராளமான ஓவியங்களை வரைந்து கொண்டே இருப்பார். அவரது பேரப் பிள்ளைகளுக்கு அவற்றைக் காட்டி களிப்புறுவார். தமது அம்மம்மா/அப்பாச்சியின் ஓவியங்களை எடுத்துச் சென்று இன்றும் அவரது பேரப் பிள்ளைகள் பாது காத்து வருகின்றனர்.அவற்றைத் தொகுத்து ஒரு கண்காட்சியாக வெளிப்படுதத சில நேரங்களில் நான் எண்ணிய போதும், முடியாது போனமை வருத்தமே.

எல்லா தாய்மார்களுக்கும் பிள்ளைகள் மீது பாசம் உண்டு. ஆனால் பிள்ளைகள் மீதான பாசத்திற்கு ஈடாக மொழியையும், தமிழ் இனத்தின் விடுதலையையும் நேசித்தவர் என்தாய் என்பது தனித்துவமானது. ஒரு காலகட்டத்தில் அவரது மூன்று ஆண் பிள்ளைகள் முழுநேர விடுதலை போராட்டத்தில் ஈடுப்பட்டு இருந்தனர். அதனை அங்கீகரித்து ஆதரிக்கும் வைராக்கியமும் உறுதியும் தற்துணிவும் தனித்துவமானது.

தந்தை செல்வா தலைமையில் யாழில் நடைபெற்ற பெரு மளவு போராட்டங்களில் என் தாயும் மகளிர் அணியின் முன்னணி யில் தீவிரமாகப் பங்குபற்றியுள்ளர். என்தாய் பங்கேற்ற பலவற் றிற்கு சிறுவனாக நானும் என் தாயுடன் சென்றிருக்கின்றேன்.

உரிமைக்கான போராட்டத்தில் எமது வழிகாட்டி எம் தாய். அவர் தன்னை பிரபலப் படுத்திக்கொள்ளாத அமைதியான ஆர்பாட்டமில்லாத உறுதியான போராளியாகவே எமது சிறு வயது முதல் பார்த்திருக்கின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தான் உயிரோடு இருக்கும் போது, வளர்ந்த பிள்கைளை இழப்பது என்பது, எந்தத் தாய்க்குமே மிகப் பெரும் வலியைத் தருவதாகும். அவர் வாழ்ந்து கொண்டிருக்கும் காலத்திலேயே நான்கு பிள்ளைகளைத் தன்கண் முன்னாலேயே இழந்தபோதும், மன உறுதியுடன் தாங்கிக் கொண்டவர். முதிர்ச்சியின் காரண மாக இயலாமை ஏற்பட்டபோதும், தனது கடமைகளைத் தானே செய்ய வேண்டுமென்ற துவண்டு விடாத உறுதிப்பாடும் அவரது இறுதிக்காலத்தில் அவரிடம் இருந்த மனோ தைரியமும், எமக்கு வழிகாட்டுவதாகும்.

என்தாயின் ஆற்றல், அவர்வெளிப்படுத்திய தன்னம்பிக்கை யுடனான வாழ்க்கைப் போராட்டங்கள் தற்றுணிவுடன் முடி வெடுத்து செயற்படும் பாங்கு போன்றனவெல்லாம் எம் தாயை எம் மனதுள் சிம்மாசனமிட்டு உட்கார வைத்துள்ளது.

'அம்மா என்றால் அன்பு மட்டுமல்ல....... அம்மா என்றால் அறிவு..... அம்மா என்றால் சிந்தனை..... அம்மா என்றால் மனோபலம் எனப் புது இலக்கணத்தை எம்முள் விதைத்து விருட்சமாக ஆழப்பதிந்துள்ளாய்.......!'

**தாயே நீ என்றும் வாழ்கின்றாய்........!**

**மகன்**
**க.சர்வேஸ்வரன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Tribute to my Dearest Appachi

My Dearest Appachi,

You had been a role model for many of our people. You experienced many tragedies and tribulations along the way but you kept going with a smile and a calm demeanor. Very few people can carry on the way you did in your life.

As a mother of ten children, your love and care towards all of your children and Grand Children cannot be forgotten.

You ran a big household with very little resources and always
Managed to put out fresh meal every day.
I fondly reminiscence the memories of the days
You looked after me when I was little and when
Appa and Amma were away.

Even though, we would love to have you
with us for few more years,
It would have been purely selfish
When your body was not willing for the same.
We planned to spend some time with you this December and
We regret not seeing enough of you in the last few years.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

You had been the center and the unifier of our family.
Your passing is a great loss for all of us.
Your memory will never be forgotten.
We pray for your eternal peace!

I am proud of many things in my life, but nothing beats having Appachi as my Grand Mother.

**Yours loving eldest Grand Son**
**Mohan**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் Iron lady அப்பாச்சி

பேரப்பிள்ளைகளின் நலன்களில் இயன்ற அளவு அக்கறை எடுத்துக் கொண்ட அப்பாச்சியின் நினைவுகள் எனது ஆறு வயதிலிருந்து நினைவுக்கு வருகின்றன.

முதல் தடவை அண்ணாவின் பரீட்சை பெறுபேறு அட்டை வந்தபோது அப்பா அண்ணா மேல் கோபப் பட்டதற்கு, தான் போய் நடுவில் நின்று 'ஏன்டா பிள்ளைகளைப் பேசுகிறாய்' என்று அண்ணாவைக் காப்பாற்றியவர்.

மாமிகள் சித்தப்பாக்களுடன் இரண்டு கைகளையும் சேர்த்து பழைய சோற்றுக்கு வரிசையில் நின்றதிலிருந்து, அரசியலில் ஊறிப்போன சித்தப்பாமாரை அருமையாகக் காணக்கிடைத்த சூழ்நிலைகளில், தாய்ப்பறவை தன் வேதனைகளைக் காட்டாது, நாளாந்த வேளைகளுடன் தன்னை ஈடுபடுத்திக் கொண்டமை எல்லாமே என் ஞாபகத்தில் வருகின்றது.

சமீபகாலங்களில் அப்பாச்சியைப் பார்ப்பதற்கு அதிக சந்தர்ப் பங்கள் கிடைத்தபோதும், அவவின் வயதிற்கேற்ப சிறிதளவு பேச்சு, பெரிதளவு புன்னகை, தப்பிக்க முடியாத ஐந்து கேள்வி கள். அந்தக் கேள்விகள் மீண்டும் மீண்டும் தனது மனத்தில் பதியும்வரை கேட்டுக்கொண்டே இருப்பார்.

எப்ப வந்தாய்?

எத்தனை பிள்ளைகள்? பிள்ளைகள் எப்படி?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படிக்கினமோ?
கலியாணம் முடித்துவிட்டார்களா?
எப்போ போறாய்?

பேரப்பிள்ளைகளின் எதிர்காலம், அவர்களின் கல்வி போன்ற வற்றை அறிவதில் ஆர்வமாய் இருந்தது மாத்திரமல்லாமல், இக்கேள்விகளினூடே நாம் என்ன செய்ய வேண்டும் என்பதை யும் உணர்த்திச் சென்றவர் அப்பாச்சி.

காலனின் அழைப்பு நெருங்குவதாக அறிந்தபோது அப்பாச் சியின் ஆத்மா கஷ்டப்படாமல் போகவேண்டும் என்று இறை வனை வேண்டிக்கொண்டேன். அப்பாவின் இறப்பு இந்த வயதி லும் என்னைத் தாக்கிக்கொண்டிருக்கும்போது அப்பாச்சியின் தலைப்பிள்ளை, எனது அப்பாவின் பிறந்தநாளன்று இவ்வுலகை நீத்தார்.

எமக்கெல்லாம் இருக்கின்ற இழப்பு 1971இலிருந்து அப்பாச் சிக்கும் இருந்திருக்கும். இவ்வுலகில் நாம் உறவுகளுடன் இருப்பது போல் அப்பாச்சியின் பயணம் தாத்தாவுடனும் தன் நான்கு பிள்ளைகளுடனுமான சந்தோஷமான சந்திப்பாக அமையட்டும்.

**உங்கள் பேத்தி**

**சாந்தா.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# You are a legend in my mind

அன்புள்ள அப்பாச்சிக்கு, உங்கள் சிரித்த முகம் என் கண்ணில் என்றும் நிற்கும். உங்கள் அன்பும் பாசமும் என் நெஞ்சில் என்றும் நிற்கும்.

கால நேர, நாட்டின் நிலைமையினால் நாம் தேசம் விட்டு தேசம் சென்றாலும் உங்களை நாம் விரும்பிய அளவிற்கு காணக்கிடைக்கவில்லையே என்ற கவலை எங்கள் மனத்தில் எப்போதும் இருக்கும்.

என்னை நீங்கள் குழந்தை காலத்தில் பராமரித்து விட்டதை யும் பின் சிறுபிள்ளையாய் இருக்கும்போது அரவணைத்து அன்பு பொழிந்ததையும் நான் எப்போதும் மறவேன். You are a legend in my mind. Rest in peace my sweet appachchi.

**அன்புப் பேத்தி**
**முகுந்தா.**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்மம்மாவின் மலரும் நினைவுகள்

அகவை தொன்னூற்றெட்டுவரை இப்புவிதனில் நல்வாழ்வு தனை வாழ்ந்திட்ட அன்பான அம்மம்மாவே! பிள்ளைகளைப் பெற்று பேரின்பம் கண்டீர்கள். அவர்களின் வளர்ச்சி கண்டு வாயார மனமார வாழ்த்தினீர்கள். உற்றார் உறவினர் அனைவரிட மும் அன்பு, பாசம் மற்றும் நேசம் வைத்தீர்கள். ஆண்டவன் தரிசனம் தினமும் செய்தீர்கள். தமிழ் மொழிமீதும் தாய்நாட்டின் மீதும் குன்றாத குறையாத நேசம் வைத்தீர்கள். பேரன், பேத்தி, பூட்டன், பூட்டி என பல பரம்பரைகளை கண்முன்னே கண்டு வியந்து மகிழ்ந்து இன்பம் கண்டீர்கள். இசை, நடனம், ஓவியம் என பலதுறைகளை இரசிப்பதிலும் அதனை வியந்து பார்த்து ஆனந்தம் கொள்வதிலும் ஆர்வம் கொண்டிருந்தீர்கள். என் மனத்தில் நீங்கா இடம்பெற்ற அம்மம்மாவே உங்கள் நினைவு என்றும் எனது மனதைவிட்டு நீங்காது. உங்களுடன் பலகாலம் சேர்ந்து வாழ்ந்ததையிட்டு மிகவும் மகிழ்வும் ஆனந்தமும் அடை கிறேன். உங்கள் ஆத்மா சாந்தியடையட்டும்.

**அன்புப் பேத்தி**

**ஜெயா.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓவியத்தில் கதை சொல்லிய அம்மம்மா

அன்பான அம்மம்மா நான் உங்களுடன் இருந்த காலங்களில் கிடைக்கும் ஓய்வு நேரங்களில் நீங்கள் நிறைய கதைப் புத்தகங்களை வாசித்தீர்கள். நீங்கள் படித்த கதைகளை மற்றவர்களுக்கும் கூறினீர்கள். சித்திரமும் கைப்பழக்கம் செந் தமிழும் நாப்பழக்கம் என்பதுபோல் சித்திரங்களை வரைந்து நிறம்தீட்டியவற்றைப் பார்த்து வியந்தேன். நீங்கள் இழந்த சக்தியையும், இழந்த கல்வியையும், நிறைவேற்ற முடியாமல் போன கனவுகளையும் உங்கள் பிள்ளைகள் மூலம் நனவாக்கிக் கொண்டீர்கள்.

மொழிப்பற்று, இனப்பற்று மட்டுமன்றி அன்பு, பக்தி, பண்பு, பாசம், ஒழுக்கம் என எல்லாவற்றையும் போதித்து வறுமையிலும் செம்மையாகப் பிள்ளைகளை வளர்த்து ஊர்போற்றும் உத்தமர் களாக்கிய பெருமையும் உங்களையே சாரும்.

வாழ்க்கை உங்களைப் புரட்டிப்போட்ட போதெல்லாம்கூட மனம் தளராது உறுதியுடன் எல்லாவற்றையும் எதிர்கொள்ளும் வீரப்பெண்ணாக வாழ்ந்தீர்கள். உங்கள் மூத்த தலைமுறையினர் நீண்டகால ஆயுளுடன் வாழ்ந்தார்கள். அவர்கள் வரிசையில் மூன்றாவது தலைமுறையாக தொன்னூற்றெட்டு ஆண்டுகளாக இம்மண்ணில் வாழ்ந்ததையிட்டு பெருமைப்படும் அதே நேரம், உங்களை இனி ஒருபோதும் பார்க்க முடியாதென்ற உண்மை எமக்கு வேதனையைத் தருகின்றது. நீங்கள் இவ்வுலகை விட்டுப் பிரிந்தாலும் உங்கள் நினைவுகள் எப்போதும் எம்முடன் வாழ்ந்துகொண்டிருக்கும்.

பேத்தி
ரஜனி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நம்வாழ்வில் நீங்கள் என்றும் தேயா நிலவு

அப்பாச்சி என்று நாம் உங்களை அழைக்கும் போது
அழகு ஒளிர உதடு தனிலே முறுகல் பூ!
எப்பொழுதும் கனிவான மொழியுதிர்த்து
எமக்கென்றே மடிதனை தொட்டிலாக்கி
முப்பொழுதும் தாலாட்டுப் பாட்டிசைத்து
முழித்திருந்து நாம் தூங்க வழிசமைத்தாய்
அப்பொழுதை நினைக்கின்றோம் இன்றிங்கே
அப்பாச்சி எம்மை விட்டுச் சென்றதென்ன!

கடல்தாண்டி நாமிங்கே வந்தபோதும்
கருணை முகம் நெஞ்சி னிலே நிழலாடுகின்றது
விடைபெற்று தூரதேசம் சென்றபோது
விழிநீரால் ஒத்தடங்கள் தந்திருந்தாய்!
விடையொன்று கூறாமலே அப்பாச்சி
விரைந்தெங்கே மீளாத்தேசம் சென்றதென்ன!
நடை தளர்ந்து நிற்கின்றோம் பேத்தியின்றி
நம் வானில் நீங்கள் என்றும் தேயாநிலவு

**பேரப்பிள்ளைகள்**
**சுதர்சன், நிருஜா, முருகன், குமார்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாரிசுகளின் மூலம் தன் கனவுகளை நிறைவேற்றிய அம்மம்மா

அம்மம்மா நான் உங்களை சில தடவைகள் சந்தித்திருக்கிறேன். நீங்கள் எப்பொழுதும் புன்சிரிப்புடன் எங்களை வரவேற்பீர்கள். உங்களுக்குக் கல்வியில் அதிக ஆர்வம் இருந்த பொழுதும் அதனைத் தொடர முடியாத நிலை உங்களுக்கு இருந்ததாக அம்மா சொல்லி அறிந்திருக்கின்றேன்.

உங்களிடம் பொறுமை, அன்பு, பாசம், அரவணைப்பு நிறைந்து காணப்பட்டதுடன், உங்கள் பிள்ளைகள் அனைவரும் கல்வியில் சிறந்து விளங்க வேண்டும் என ஆசைப்பட்டீர்கள். உங்கள் விருப்பிற்கேற்ற வண்ணம் பிள்ளைகள், பேரப் பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள் அனைவரும் கல்வியைக் கற்று பலவிதமான வல்லுனர்களாக பல நாட்டிலும் இருக்கிறார்கள்.

உங்கள் நூறாவது பிறந்தநாளைக் கொண்டாட வேண்டும் என நாம் விருப்பத்துடன் கதைத்த நேரம் இறைவன் உங்களை தம்முடன் அரவணைத்துக்கொண்டார்.

உங்கள் விருப்பப்படியும் உங்கள் நல்ல மனத்தினாலும் பல தலைமுறைகளைப் பார்த்து அவர்களின் அறிவை முகமலர்ச்சியுடன் வாழ்த்தினீர்கள். உங்களை என்றும் மறவேன். உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றேன்.

**பேத்தி**

**டொக்டர் பவித்ரா.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## My Ammamma - An Artistic woman

A lady without whom I would not be here. She is a lady I remember meeting only a handful of times throughout my 27 years of life, and the few memories I have of her are heart-warming and memorable.

What I remember the most clearly about my grandmother is her love of art! She was a very creative woman with many artistic abilities I envy. She would draw and paint an array of beautiful pictures and post them to us in England, or give them to our relatives to bring in their suitcases. I loved these pictures and paintings and this made me feel her love despite being many thousands of miles away.

She was a very loved and loving woman who has raised many amazing children who have gone on to raise even more amazing grandchildren. I feel proud to be part of her family and I truly hope that I can create a life for myself and my family to make her proud.

I love you Ammama. Rest in peace.

**Kandipan Sivarajah**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## There are no words to express our gratitude to our beloved Appachi

It pains us deeply to have to say goodbye like this. Though we are grateful and happy to live where we do today, it is times like these that reminds us just how far from home we really are, it is times like these that when the yearning for the people we love becomes so unbearable. How bittersweet it is to think back on the few, yet, wonderful moments and experiences we have shared with you, and the many more that we could not.


But scattered throughout these memories, we also see so much hope for the future, a hope you've given this world through your legacy. A hope that each and every one of your children, grandchildren and great grandchildren will carry in their eyes. We see your spirit through their hearts. We feel your compassion, and in their voices, we hear your strength. And as a part of your legacy, we have no greater words to express our gratitude to you, for being a part of our lives than thank you.


Thank you Appachi. For making all of us possible.


From your Grandchildren,
Vigneshwar, Abarna and Priyanka.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







அம்மா 75 வயதுக்குப்பின்னர் ஓய்வு நேரங்களில் தனது பேரப்பிள்ளைகளுக்காக வரைந்த ஓவியங்களில் சில....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருட்டு இரசிகை மனம் திறக்கிறாள்

பாக்கியவதி!
சிந்தனையில் பாரதி அன்பில் அம்மா
பூமியின் பொறுமை
கம்பீரத்தில் ஆண்சிங்கம்
முறத்தால் புலி
விரட்டும் வீரம்
பிடிவாதத்திலும் குழப்படியிலும் ஒரு குழந்தை
எங்கள் குடும்பத்தின் ஆலமரம்
என் இனிய அப்பாச்சி/கிழவி

எத்தனையோ போட்டிகளில் என் எழுத்தும் சிந்தனையும் பரிசுகள் வாங்கியிருக்கின்றன. ஆனால் உங்களைப் பற்றி எழுத நினைக்கையில் சோகத்தில் என் கைகள் கூட பிதற்றுகின்றன.

நான் தொட்டு, உணர்ந்து, மடியில் அமர்ந்து, கட்டிப்புரண்டு கூடவே வாழ்ந்த என் அப்பாச்சிக்கிழவி கல்லாய் மரத்துக் கிடந்ததை ஜீரணிக்க முடியவில்லை. ஒரு நிறைவான வாழ்க்கையை வாழ்ந்து முடித்துவிட்டாரென்று பலரும் கூறுகையில், உங்கள் குறும்புச் சிரிப்பு நினைவில் வந்து அப்படி என்ன வயதாகிவிட்டது எனக்கு என்று கேட்பதுபோல் தோன்றுகிறது. வெயிற்கால மேகம்போல் வெளுத்திருந்த கூந்தலை சவுரி முடி சேர்த்து கொண்டை போடுவார். பின் அதற்கும் முடி போதாமல் போக என் முடியெல்லாம் கொட்டிவிட்டது என்று பரிதாபமாய் என்னிடம் முறைப்பாடு செய்த அழகுக் கிழவி. அப்பாச்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருநீறு, சந்தனம் இடும் அழகை ஒளிந்திருந்து இரசித்த திருட்டு இரசிகைகள் நானும் என் அம்மாவும்தான். அப்பேற்பட்ட அழகுக் கிழவியை என் பிரிய அப்பாச்சியை இலையான்கள் மொய்த்தன. கிரியைகள் என்ற பெயரில் என்னவெல்லாமோ ஊத்தினர். கடைசியில் கட்டையில் வைத்து எரித்தும் விட்டனர்.

அழமட்டும் தான் முடிகிறது என்னால். என்செல்ல அப்பாச்சி. வாழும் என்னோடு இருந்ததுபோல் நான் வாழும்நாள்வரை காவல் தெய்வமாக என்னோடு இருக்க வேண்டுகிறேன்.

இது இந்த பதினோராம் பிள்ளையின் அன்பு வேண்டுகோள். ஆம் என் அப்பாவிற்குப் பின் பதினோராம் பிள்ளையாக உங்கள் அரவணைப்பில் வளரப்பெற்ற நான்தான் அந்த முதல்வரி பாக்கியவதி.

**பேத்தி**
**நிஷா.**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Great-grandchildren's homages

My great-grandmother was a very important and influential to the people in my life. Unfortunately, I was never able to meet her, but I know that she was a great mother and grandmother to some important people in my life.

Great grand daughter
Ashhwinii

Although, I never had a chance to meet my great grandmother, I know and I heard that she was a very kind person. Thankfully my mother and grandmother have taught our family the same values. Her demise is the great loss to all of us.

Great granddaughter
Arrthi





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்புத் தாயின் பிரிவை ஏற்க முடியவில்லை

தந்தை செல்வாவின் படையணியில் மகளிர் பிரிவை அலங் கரித்தவரும் அவரது இனப்பற்றினூடாக எமது கட்சிக்கு தலை வரையும் வடக்கு மாகாண மக்களுக்கு கல்வி அமைச் சரையும் பெற்றுத்தந்த எமது பாசமிகு அன்னை திருமதி கந்தையா நாகம்மா அவர்கள் இயற்கை எய்திவிட்டார் என்ற செய்தியை நம்புவதற்கு மனம் மறுக்கிறது.

அன்னை அவர்கள் தமது இளமைக்காலம் தொட்டே இனவிடுதலைப் போராட்டத்தில் தந்தை செல்வாவின் உணர் வால் ஈர்க்கப்பட்டு பொதுக்கூட்டங்களில் தவறாமல் பங்கு பற்றி யவர். குடும்பப் பொறுப்புக்களையும் சமுதாயப் பற்றையும் இரண்டு கண்களாகக் கொண்டு வாழ்ந்துகாட்டியவர். வீட்டிற்கு வருபவர் களை இன்முகத்துடன் வரவேற்று உபசரிப்பதில் வல்லவர்.

ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் ஸ்தாபக உறுப்பினர்களில் ஒருவரும் இன்று எமது கட்சியின் தலைவராக வும் திகழும் தோழர் சுரேஷ் க.பிரேமச்சந்திரன் உள்ளிட்ட பத்து குழந்தைகளை ஈன்றெடுத்தவர். ஒவ்வொருவரும் தமது துறை களில் தடம் பதித்தவர்கள். ஈரோஸ் அமைப்பின் ஸ்தாபக உறுப் பினரும் சர்வதேச அரசியலில் நிபுணத்துவம் பெற்றவருமான தோழர் கலாநிதி ஆ.க.மனோகரன் அவர்கள் வடக்கு மாகாண கல்வி அமைச்சரும் எமது கட்சியின் துணைச் செயலாளருமான தோழர் கலாநிதி கந்தையா சர்வேஸ்வரன் ஆகியோரை எமது மக்களின் விடிவிற்காக அர்ப்பணித்தவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு பாரம்பரிய அரசியல் பின்னணியைக் கொண்ட குடும்பத்தின் ஆணிவேரான அன்னை கந்தையா நாகம்மாவின் பிரிவு அவர்களது குடும்பத்தினருக்கு மட்டுமன்றி, ஒட்டுமொத்த தமிழ்த் தேசிய இனத்திற்கும் பேரிழப்பாகும். அன்னாரை இழந்து தவிக்கும் அவரது குடும்பத்தினரின் துயரில் ஈழ மக்கள் புரட்சி கர விடுதலை முன்னணியும் பங்குகொள்கிறது.

**தோழர்கள்**
**ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர் வாழ்வியல்

தமிழர் சுமார் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே பண்பாட்டிலும் நாகரிகத்திலும் சிறந்திருந்தனர் என்பதை சங்க இலக்கியங்கள் உணர்த்துகின்றன. மொழிக்கு இலக்கணம் வகுத்த தமிழர்கள் மனித வாழ்வியலுக்கும் இலக்கணம் வகுத்து வாழ்ந்தனர். தமிழர் வாழ்வை அகவாழ்வு, புறவாழ்வு என இரண் டாக இலக்கணம் வகுத்து வாழ்ந்தமை பண்பாட்டின் சிகரமாகக் கருதப்படுகிறது. தான் தோன்றிய கால மக்களின் நாகரிகம், பண்பாடு, பழக்கவழக்கங்கள், வாழ்க்கை முறை, அரசு, அமைச்சுர், ஆட்சிமுறை, போர், வீரம், காதல் போன்ற வற்றை நமக்குக் காட்டி நிற்கின்றன. நமக்குக் கிடைத்திருக்கும் சங்க இலக்கியங்களிலிருந்து தமிழர் பண்பாட்டை நன்கு அறிகிறோம். பண்பாட்டின் கூறுகள் சிலவற்றைப் பற்றி இங்கு காண்போம்.

### வீரம்

பண்டைய தமிழர்கள் வீரத்தைத் தொல்காப்பியப் புறத் திணை இயல் எடுத்துக் கூறுகின்றது. பெரும்பாலும் தற்காப்பு முறையில் தான் போர் நடைபெற்றது. தேர்ப்படை, யானைப் படை, குதிரைப்படை, காலாட்படை என்ற நால்வகைப் படை களும் போரில் ஈடுபட்டன. வெட்சி, வஞ்சி, உழிகை, தும்பை என்ற நான்கு புறத்திணை பகுதிகளிலும் தமிழர்களின் போர் முறைகள் தொல்காப்பியத்தில் காணப்படுகின்றன. மேலும் வீரர் அல்லாத வர்கள், புறங்காட்ட ஓடுவார், புண்பட்டார், முதியோர், இளை யோர், இவர்கள் மீது படைக்கலம் செலுத்தலாகாது என்பதும் புறநானூற்றால் அறிய முடிகிறது.

### காதல்

தமிழர் காதலை அன்பின் ஐந்திணை என்றனர். இஃது ஒருவனும் ஒருத்தியும் கொண்ட உளமொத்தத் தூயகாதல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க்கையாகும். இது களவு, கற்பு என இரண்டாக அமையும். ஐந்திணை ஒழுக்கத்தில் தலைமக்களாக விளங்குபவர்கள். அறிவும், செல்வமும் உடைய நல்லகுலத்தில் பிறந்தவர்கள். இக்காதல் நாடகத்தில் தலைவன், தலைவி நற்றாய், செவிலித் தாய், தோழி, பாணன், பாடினி போன்றோரும் ஊர் மக்களும் பாத்திரங்களாக வருவர். இக்காதல் வாழ்வு அறத்திலிருந்து மாறுபடாமல் அன்பின் வழிப்பாட்டாக அமையும்.

'மங்கலம் என்ப மனைமாட்சி மற்றதன்
நன்கலம் நன்மக்கட் பேறு'

என்று வள்ளுவரும் காதல்வழிவந்த மனை மாட்சியைச் சிறப்பிக்கின்றார்.

## நட்பு

சங்ககாலத் தமிழர் நட்பினை பெரிதும் மதித்து வாழ்ந்தனர். திருவள்ளுவரும் உண்மையான நட்புக்கு இலக்கணம் கூறியுள்ளார்.

'முகம்நக நட்பது நட்பன்று நெஞ்சத்து
அகநக நட்பது நட்பு'

உள்ளன்புடன் மனம் மகிழ்ந்து நட்பு கொள்வதே உண்மை யான நட்பாகுமென்றார்.

## விருந்தோம்பல்

'விருந்து' என்ற சொல்லுக்குப் 'புதுமை' என்பது பொருள். உறவினரும் நண்பரும் அல்லாதவராய் புதியராக நம்மிடம் வரும் மக்களை 'விருந்து' என்றனர் தமிழர். அறியாதவர்களையும் அழைத்து உணவளித்து இடமளித்து உபசரித்து மகிழ்ந்தனர் தமிழர்.

'செல்விருந்து ஓம்பி வருவிருந்து பார்த்திருப்பான்
நல்விருந்து வானத் தவர்க்கு'

என்கிறார் திருவள்ளுவர். விருந்தினர்களை வெளியில் இருக்கச் செய்து தான் மட்டும் வீட்டின் உள்ளே உண்ணுதல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாவாமைக்கு மருந்தாகிய அமிர்தமாக இருந்தாலும் வேண்டப் படுவதில்லை என்பதை வள்ளுவர்,

'விருந்து புறத்ததாத் தானுண்டல் சாவா
மருந்தெனினும் வேண்டற்பாற் றன்று'

என்று கூறுவதிலிருந்து விருந்தோம்பல் சங்க கால மக்களின் பண்பாக இருந்தமை அறிய முடிகிறது.

இவை மட்டுமன்றி ஈகை, கொடை, கற்புடைமை, உலக ஒருமைப்பாடு ஆகியவற்றையும் தமிழ்ப் பண்பாட்டின் கூறுகளாகக் கொள்ளலாம்.

## தமிழர்களின் சமையலும் சாப்பாட்டு முறைகளும்.

உலகம் முழுவதும் பலவிதமான உணவு முறைகளை மனிதர்கள் கடைபிடிக்கிறார்கள். தமிழர்களும் தங்களுக்கென தனிப்பாணி சமையல் முறையைக் கொண்டிருந்தனர். கலாசாரம், மொழி எல்லாவற்றிலும் கலப்பு ஏற்பட்டுவிட்டன. இதற்கு உணவுப் பழக்க வழக்கமும் விதிவிலக்கல்ல. இருந்தாலும் சமையல் மற்றும் உணவு, உணவுப் பழக்க வழக்கத்தில் தமிழருக்கான தனிச்சிறப்புகள் நிறையவே இருக்கின்றன.

தமிழர் சமையல், உலகின் சிறந்த சமையல் கலைகளில் ஒன்றாகும். தென் இந்தியா, இலங்கை மற்றும் பிற நாடுகளில் வசிக்கும் தமிழர்களால் பல நூற்றாண்டுகளாக வளர்த்தெடுக் கப்பட்டதே தமிழர் சமையல் கலை. இயற்கையுடனும், கால நிலைகளுடனும் இணைந்திருப்பது தமிழர் சமையலின் தலை யாயச் சிறப்பு. பலவித உணவுகளை, அறுசுவையுடன் சமைப் பதும், விருந்தோம்புவதும் தமிழர் பண்பாடு.

பல்வகை காய்கறிகள், நறுமணப் பொருட்கள், இறைச்சிகள் தமிழர் சமையலில் இன்றியமையா இடம் பெறுகின்றன. சோறும், கறியும் தமிழரின் முதன்மை உணவாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழந்தமிழ் இலக்கியங்களில் சமையலைப் பற்றிய குறிப்புகள் உண்டு. உணவு சமைக்கும் முறைகளைக் கூறும் நூல்கள் 'மடை நூல்' எனப்பட்டன. சிறுபாணாற்றுப் படை, மணிமேகலை, சீவகசிந்தாமணி முதலிய நூல்களில் உணவுப் பண்டங்கள் பற்றிய குறிப்புகள் நிரம்ப உள்ளன. பதார்த்த குண சிந்தாமணி நூலில் உணவுப் பண்டங்களின் தன்மையும், நோய் நீக்கும் குணமும் விவரிக்கப்பட்டுள்ளது.

காலத்திற்கும், நிலத்துக்கும் ஏற்ற உணவுகளை மேற்கண்ட நூல்களில் அறிந்து கொள்ளலாம். தமிழர்கள் செழுமையாக சமைத்து, வேகமாகவும், அதிகமாகவும் உண்ணும் வழக்கம் உடையவர்கள்.

'கடுகு இட்டுக் காய்கறிகளை தாளிப்பது', 'பசு வெண்ணை யில் பொரிப்பது', 'முளிதயிர் பிசைந்து தயிர்க் குழம்பு வைப்பது, கூழைத் தட்டுப் பிழாவில் ஊற்றி உலரவைப்பது', 'மோரில் ஈசலை ஊறப்போட்டு புளிக்கறி சமைப்பது' போன்றவை குறிப் பிடத்தக்க பழந்தமிழர் சமையல் முறைகளாகும்.

நெற்சோறு, வரகுச்சோறு, வெண்ணற்சோறு, நண்டுக் கறி, உடும்புக் கறி, விறால் மீன் குழம்பு, கோழி இறைச்சி, வற்றல், பன்றி இறைச்சி, முயல், மாங்கனிச் சாறு, மாதுளங்காய்- மிளகுப் பொடி- கறிவேப்பிலை பொரியல், ஊறுகாய் ஆகியவையும் தமிழரின் உணவுப் பட்டியலாகும். கள்ளும் விரும்பி உண்பர்.

தமிழர்கள் கைகளை நீரில் கழுவிய பின்னர், ஒரு கையினால் (பொதுவாக வலதுகை) உணவு உண்ணும் வழக்கம் கொண்டவர்கள். இது கரண்டி, முள்ளுக்கரண்டி, கத்தி போன்ற கருவிகளை பயன்படுத்தி உண்ணும் மேலைநாட்டு வழக்கத் துக்கும், குச்சிகள் கொண்டு உண்ணும் சீன வழக்கத்துக்கும் மாறுபட்ட வழக்கம் ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழர்கள் விரும்பி உண்ணும் சோறு, இடியாப்பம், புட்டு, தோசை போன்ற உணவுகளையும் கறிகளுடன் கைகளால் உண்ணுவதே எளிது. தற்காலத்தில் கரண்டி போன்ற கருவிகளை பயன்படுத்தி உண்ணும் பழக்கம் பரவி வருகிறது.

தமிழர்கள் வாழும் பகுதி நீண்ட கடற்கரையை கொண்டுள்ள தால், கடலுணவும் அவர்களின் உணவுப் பழக்கத்தில் முக்கிய பங்கு வகிக்கின்றது. மீன், இறால், நண்டு, கணவாய், மட்டி ஆகியவை தமிழர்களால் விரும்பி உண்ணப்படுகின்றது.

தமிழர்கள் கோழி, ஆடு, மாடு, பன்றி, அணில், முயல், உடும்பு போன்ற உணவுகளை உண்ணும் வழக்கம் உடையவர்கள். கோவில்களில் விலங்குகளை காவு கொடுத்து அதன் இறைச் சியை பங்கு போட்டு உண்ணும் வழக்கமும் உண்டு.

தமிழர்களின் சமையல் இடங்களுக்கு ஏற்ப பல வித்தியாசங் களையும், சிறப்புகளையும் கொண்டது. ஈழத்தமிழர் சமையல், மதுரைச் சமையல், கொங்குநாட்டு சமையல், செட்டிநாடு சமை யல், அந்தணர் சமையல், சேலம் சமையல், நெல்லை சமையல், இஸ்லாமியத் தமிழர் சமையல், கிராமியத் தமிழர் சமையல், கனேடியத் தமிழர் சமையல் போன்றவை குறிப்பிடத்தக்கவை.

அம்மி, குழவி, உரல், உறி, ஆட்டுக்கல், திருகைக்கல், திரு கணி, மண் அடுப்பு, உலக்கை, அரிவாள்மனை, முறம், சுளகு, அகப்பை, மூக்குப்பேணி போன்ற சமையல் அறை கருவிகளை தமிழர்கள் பயன்படுத்தினர். இவைகளில் பல இப்போது உப யோகத்தில் இல்லை.

வெற்றிலை தமிழர் பண்பாடு மற்றும் வாழ்வியலில் ஒரு முக்கிய இடத்தைப் பெற்றிருக்கிறது. மங்கலத்தின் அடைய மாகக் கொள்ளப்படும் வெற்றிலை இல்லாமல் எந்த பூசையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லை. வாழ்க்கை வட்ட சடங்குகளும் இல்லை. வெற்றிலை என்பது மிளகு வகையை சேர்ந்தது, மருத்துவ குணம் மிக்கது. அது கொடி போல படர்வது, வெற்றிலை கொடிக்கால் என்று சொல்வது இதனால்தான் ! வெற்றிலை என்று நாம் சொன்னாலும் அதன் பெயர் காரணம் என்னவென்று தெரியுமா? எல்லாக் கொடி களும் பூ விடும், காய் காய்க்கும், ஆனால் வெற்றிலைக் கொடி பூக்காது, காய்க்காது, உட்கொள்ளக்கூடிய வெறும் இலை மட்டும்தான் விடும், இதனால் வெற்று இலை என்பது சுருங்கி வெற்றிலை ஆகிவிட்டது. இது வளர்வதற்கு தண்ணீர் ஜாஸ்தி தேவை, வெற்றிலையைப் பயிர் செய்ய விதை என்று எதுவும் இல்லை. காம்புகளை வெட்டிப் பதியன் போட்டுத்தான் பயிர் செய்கிறார்கள். வெற்றிலையில் கரும்பச்சை நிறத்திலிருப்பது ஆண் வெற்றிலை என்றும், இளம்பச்சை நிறத்திலிருப்பது பெண் வெற்றிலை என்றும் இரண்டு வகையாகப் பிரிக்கிறார்கள். சிலர் அதில் பின்புறம் இருக்கும் நரம்புகளைப் பார்த்தும் ரகம் பிரிப்பதுண்டு. ஒரு வருடத்தில் நன்கு வளரும், பின்னர் மூன்று வருடங்களுக்கு வெற்றிலையை பறிக்கலாம்

சுண்ணாம்பு, பாக்கு முதலியவற்றுடன் வெற்றிலையைப் போடு வது ஜீரணத்திற்கு உதவுவதுடன், மிகச்சிறந்த கிருமி நாசினியா கவும் செயல் படுகிறது. வாய்க்குப் புத்துணர்ச்சியையும் கொடுக் கிறது. பிரசவித்த பெண் வெற்றிலை போடுவதால் பால் நன்றாக சுரப்பதுடன் பசி, தாகம் இவையும் அடங்கும். வெற்றிலையுடன் சுண்ணாம்பு சேர்வது எலும்புகளுக்கு உறுதி அளிக்கிறது. அந்தக் காலத்தில் ஏழைகள் முதல் பணக்காரர்கள் வரை வெற்றிலை போடுவதை ஒரு பழக்கமாகக் கொண்டிருந்தார்கள். ஆடை தரித்தல், அணிகலன் போடுதல் என்பன ஒருவர் தன்னை அலங்கரித்துக் கொள்ள செய்யும் செயல்களாகும். அது போலவே வெற்றிலை போடுவதும் ஒரு அலங்கரித்துக் கொள் ளும் செயலாகும். எனவே தான் தாம்பூலம் தரித்தல், வெற்றிலை போடுதல் என்பதான சொல் வழக்குகள் இருக்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெற்றிலை போடும் பழக்கம் கொண்ட சிலர் வெற்றிலை, பாக்கு, சுண்ணாம்பு போன்றவற்றை வைப்பதற்கு பித்தளையில் ஆன ஒரு சிறு பெட்டியை வைத்திருப்பார்கள். அதை வெத்திலை செல்லம் என்று செல்வார்கள். வெத்திலை பெட்டி என்றும் சொல் வார்கள். சில கனவான்கள் வெள்ளி மாதிரியான விலை உயர்ந்த உலோகத்தில் கலை நயம் மிக்க வடிவில் உருவாக் கப்பட்டிருக்கும் வெத்திலை செல்லத்தை வைத்திருப்பார்கள். எங்கள் பள்ளி தலைமை ஆசிரியர் ஒரு வெற்றிலை பிரியர். அவர் அறையில் அன்னப்பறவை போன்ற வடிவத்தில் வெள்ளி யினால் செய்யப்பட்ட வெத்திலை செல்லம் ஒன்று மேசையின் நடுநாயகமாக எப்போதும் இருக்கும். அதன் உள் ஆத்தூர் தளிர் வெற்றிலை. கழிப்பாக்கு, சிறப்புக்கவனத்துடன்

நீத்தப்பட்ட வெள்ளை வெளேர் சிப்பி சுண்ணாம்பு போன்றவை அதன் அதன் இடத்தில் அழகாக அடுக்கி வைக்கப்பட்டிருக்கும். அன்னபட்சியின் வடிவத்திலிருக்கும் வெத்திலை செல்லத்தின் இரண்டு சிறகுகளும் திறந்து மூடும் வசதியுடன் கதவு போல் செயல்படும். வெத்திலை செல்லத்திலிருந்து வெற்றிலையை எடுத்து தன் கையில் வைத்து முன்னும் பின்னும் பார்த்து பரிசோதனை செய்த பிறகு வெற்றிலையின் காம்பை அதன் அடிப்பகுதியில் ஓரளவிற்கு ஒடிப்பார். முக்கால் வாசி ஒடித்த வெற்றிலைக் காம்பை மெல்ல இழுக்க. ஒடிந்த வெற்றிலைக் காம்போடு சேர்ந்து வெற்றிலையின் நரம்புகளும், கோர்வையாக வெளியே வந்துவிடும். அந்த வெற்றிலையை இடது உள்ளங் கையில் வைத்து, அதன் முதுகில் சுண்ணாம்பு டப்பியில் உள்ள, வெண்ணை போன்ற பதமான சுண்ணாம்பை வலது கை சுட்டுவிரலால் எடுத்து தடவுவார். பின்னர், ஒரு தினுசாக அந்த வெற்றிலையை மடித்து, மிக லாவகமாகத் தன் வாயினுள் திணிப் பார். ரசித்து, ருசித்துச் சாப்பிடுவதைப் போல, சுவைத்தபடி ஏதோ ஒரு பாட்டின் ராகத்தை வெறும் ஒலியாக எழுப்பிக் கொண்டே அவர் வெற்றிலை போடுவது பார்த்து ரசிக்கத்தக்க அழகுடன் இருக்கும். அது ரசித்து மகிழும் ஒரு நாடகக் காட்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சியை போல நேர்த்தியானதாயிருக்கும். இப்படி தமிழர் தம் பண்பாட்டோடு இணைந்து பிறப்பு முதல் இறப்பு வரை நேரடியாகவும், மறைமுகமாகவும் ஒன்றாக கலந்து வந்து கொண்டிருக்கிறது வெற்றிலை.

தமிழ் நாட்டிலிருந்து வேறுபடும் ஈழத் தமிழர் பறையும் பறை மேளக் கூத்தும்
'மட்டக்களப்பு பூர்வீகக் கலைகள் அந்நிய மோகத்தில் ஆடிப்போகும் ஆபத்து...'

நாடுகளின் காட்டுவெள்ளம் போன்ற பெருவளர்சிகளுக்கு ஈடு கொடுக்க முடியாமல் நாம் வாழுகின்ற ஆசிய நாடுகள் 50 வருடங்களுக்கு பின்னால் நிற்ப்பதற்கு நிறையவே காரணங்கள் இருக்கின்றன. அவைகள் மதவாதம், இனவாதம், மொழிப் பிரிவினை, சாதிச்சண்டை இன்னும் எத்தனையோ.. இவைகள் உழைக்கும் ஆற்றல், கண்டுபிடிப்பாற்றல், புதிது புனையும் ஆற்றல் என்பனவற்றையெல்லாம் அடியோடு அழித்திருக்கின்றது.

அவற்றை நன்கு புரிந்துகொண்ட அன்னிய ஆட்சியாளர்கள் இதை தங்கள் ஆட்சிக்காலங்களில் இவற்றை வைத்துக் கொண்டுதான் பிளைப்பு நடத்தி இருக்கின்றனர். மட்டுமாநகரின் பிரசித்தம் வாய்ந்த அரங்க கலை வடிவங்களில் பறைமேளக் கூத்து தனித்துவமானது. இக்கலையானது மட்டக்களப்பு பிரதேசத்தில் பறையர் சாதியினர் வாழ்கின்ற கோளாவில், களுதாவளை, புன்னைக்குளம், ஆரையம்பதி, கல்முனை, வெல்லாவெளி, பிலாலிவேம்பு, மாவடிவேம்பு ஆகிய பகுதிகளிலே சிறப்பாக பேணப்பட்டுக் கொண்டு வருகின்றது. பறையர் சமுகத்தின் பண்பாட்டினைப் பேணி வருகின்ற பறைமேளக் கூத்தினை வாழும் கலையாக தக்க வைத்துக் கொள்வதே கலைஞர்களின் கடப்பாடாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பறைமேளக் கூத்தின் தோற்றம்

ஆரம்பகாலங்களில் கிராமங்களுக்கு வருகின்ற பெரியவர் களை வரவேற்பதற்கும், செய்திகளை எடுத்துச் சொல்வதற்கும் பறை அறைதல் எனும் செயற்பாடு இருந்தது. இவற்றினூடாக ஆட்டங்களையும் அபிநயங்களையும் உள்வாங்கி பறைமேளக் கூத்தாக உருவாக்கி இருக்கலாம் என்று சொல்லப்படுகின்றது.

இப்பறை மேளக்கலையானது ஆலயங்களிலே ஆலயத் தாளம், அபிஷேகத்தாளம், அழைப்புத்தாளம், சுற்றாலைத் தாளம், பெரியபூசைத்தாளம் என்பவற்றிற்கும் மரணத்திலே ஆரம் பத்தாளம், தெரியப்படுத்தும்தாளம், எடுத்துச்செல்லும்தாளம், சந்திகூடும் தாளம், என்பவற்றின் உடாகவும் ஆடம்பரத்திற்காக வரவுத்தாளம், கோணங்கித்தாளம், இராசதாளம், பல்லாக்குத் தாளம், நாலடித்தாளம், ஆறடித்தாளம், எட்டடித்தாளம், தட்டு மாறும் தாளம் என இவ்வகைத்தாளங்களுக்கு ஏற்ப பறைமேளம் இசைக்கப்பட்டுக் கொண்டு வருகின்றது.

இன்று தமிழர்களின் திருவிழாக்களில், வரவேற்ப்பு வைபவங் களில், பொது நிகழ்வுகளில் ஏன் கல்யானம் போன்ற பாரம்பரிய கலாசாரச் சடங்குகளில்கூட பேண்ட் வாத்தியம் முதலான இன்னொருவரின் கலையை தூக்கி வைத்து ஆடும் ஒரு கேவல மான மனோபாவத்தால் இற்றைக்கு ஐயாயிரம் வருடத்துக்குமேல் பழங்குடியாக இருந்துவரும், செம்மொழி உரித்துடைய எமது கலை குப்பைத்தொட்டிக்குள் வீசும் கீழ்நிலையால் நம்மை நாமே தொலைத்துக் கொண்டிருக்கிறோம்.

## தமிழர்களின் பாரம்பரிய கலைகள்

பாவம் நம்ம மக்கள் இதனால் நல்ல கலாசாரத்தை இழந் திருக்கின்றனர், வளங்களை இளந்திருக்கின்றனர். என்னிடம் ஒரு நண்பர் கூறும்போது இவற்றின் ஆழமான தாக்கம் புலநாகியது. குறிப்பாக இலங்கையில் அதிலும் மட்டக்களப்பில் நிறையவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரம்பரியக்கலைகள் இருந்து வந்தது. இவைகள் புத்தகங்களில் படிக்கும் அளவுக்கு மட்டுப்படுத்தப்பட்டிருக்கும் துரதிஸ்டம் யாருக்கும் வரக்கூடாது. அண்ணாவியார் பரம்பரை, பறையடிப் போர் பரம்பரை, சாத்திரக்கலைஞர்கள், அதர்வணவேதம் பயின் றோர் இவர்களுக்கும் அதேகெதிதான் நடந்து கொண்டிருக்கிறது.

பறை இது சங்ககாலத்தின் புலத்தில் இருந்து மருவி வரும் தமிழர் கலையாகும். இவர்கள் இப்போது பாராட்டப்பட்டும், போற் றப்பட்டும் வந்தனர். கல்யான வீடு, கோயில் திருவிழாக்கள், சடங்கு வைபவங்கள், வரவேற்ப்பு வைபவங்கள், ஏன் மரண வீடுகளில் எல்லாம் சூழ்நிலைக்கேற்ப்ப பல ராகமோடிகளைப் கொண்டு தமிழர் வாழ்வில் மங்காத இடத்தினைப்பிடித்திருந்தது.

**பறை இன்னிசை அற்றுப்போக உள்ள காரணம்**

பறைமேளக்கூத்தின் ஆற்றுகையாளர்களாக விளங்கும் பறையர் மற்றவர்களின் புறக்கணிப்பினால் ஏற்படுகின்ற தாழ்வு மனப்பாங்கும், சாதிமுறைமைக்குள் பறைமேளக்கலை இருப்பது வும் இக்கூத்து மருவி வருகதற்கான காரணங்களாகக் குறிப்பிட லாம். அத்தோடு இளைஞர்கள் தாங்கள் பறைமேளத்தை பழகி னால் சமூகத்தில் அந்தஸ்து கிடைக்காது என்று எண்ணுவதும், ஊர்களிலே பறைஅடிப்பதற்கு தடைவிதிப்பதும், பறையர் சமூகத்தினரை ஊர்களில் ஒதுக்கி வைப்பதும் இக்கூத்து மருவி வருவதற்கான காரணங்களாக குறிப்பிடலாம் போர் சூழலும் அதனால் ஏற்பட்ட இழப்புக்களும், இதனால் மக்கள் மனங்களில் ஏற்பட்ட அபரீதமான மன உளைச்சல்களும் கலைகளைப் பாதித்து நின்றது. இந்நிலையும் பறைமேளக்கூத்தின் வீழ்ச்சிக்கு ஓர் காரணம் என்று குறிப்பிடலாம்

கவலைதரும் விடயம் என்னவெனில் பலபேரும் ரசிக்கும்படி இசையமைக்கும் கலைஞன் அவற்றை செய்ய முடியாத சாதாரண மக்களால் ஒதுக்கப்பட்டான். அவர்கள் கோயிலுக்குள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நுளைய மறுக்கப்பட்டனர், பொது நிகழ்வில் கலந்துகொள்ள மறுக்கப்பட்டனர், சுகதுக்கங்களில் பங்குகொள்ள ஒதுக்கப்பட்ட னர் ஆக இனிய இசையான பறைமேளம் வாசிச்ச குற்றத்துக் காக. காலப்போக்கில் அவர்கள் தாழ்ந்த இனம் என பச்சை குத்தப்பட்டனர்.

## இன்றும் போற்றும் சிங்களப் பறை...

ஆனால் மறுபுறத்தில் சிங்கள மக்கள் அவர்களை ஊர் ஊராக வளர்த்து அவர்களது பாரம்பரியம் என மார்தட்டும் அளவிற்க்கு அதற்கென பிரத்தியேக பாட அலகுகள் எல்லாம் பல்கலைக்கழக மட்டத்தில் ஆரம்பித்து இருக்கின்றனர். அவர் கள் கௌரவிக்கப்படுகின்றனர், எங்கள் கலை என மார் தட்டு கின்றனர், தங்கள் தனித்துவத்தை நிலை நாட்டுகின்றனர். ஆனால் இங்கு எமெக்கென இருந்த பாரம்பரியம், தனித்துவம், கலாசாரம் இவையெல்லாம் ஒரே இரத்தம் கொண்ட மனித வர்க்கத்தினால் பிரித்துப் பார்ப்பது விசித்திரமாகவே இருக்கிறது.

## புதிய தலைமுறையில்...

இருப்பினும் நீண்டு சென்ற சிவில் யுத்தம் இந்த இனவெறியர் களை சற்று பின்தள்ளி இருந்தது. ஆனாலும் அந்தக் கலைஞர் குழாம் வளர்ந்து, குடும்ப நிலையில் சந்தோசமாக இருக்கின்ற னர். மறுபுறத்தில் பழைய கலைஞர்களுடன் அவை புதிய தலை முறைக்கு எடுத்துவரப்படாமல் அது அங்கேயே நின்றுவிட்டது, துயரமே. இதனால் அவர்கள் தங்களுக்கு என கோயில், தங்க ளுக்கென சடங்குகள், சம்பிரதாயங்கள் என்று அவர்கள் தனித் துவமாய் வாழப்பழகி விட்டனர், இது மறுபுறத்தில் இந்த சாதிய வாதிகளுக்கு கடுப்பூட்டும் செயலாக இருப்பினும், அவர்களின் அடிப்படை மனித உரிமைகளுக்கு மதிப்பு கொடுத்தாக வேண்டிய தேவை இவர்களுக்கு கட்டாயமாக்கப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பேரசிரியர் மௌனகுருவின் புரட்சியும், கட்டிக்காப்பும்....**

இந்த தமிழர் பண்பாட்டுக் கலை எச்சசொச்சம் இல்லாமல் போவதை யாரும் விரும்புவதில்லை, ஆனாலும் அவற்றை முன் னெடுக்கும் தெம்பும் யாரிடமும் இல்லை. சிலரால் மட்டுமே அவை இன்றும் கொஞ்சமாவது மின்னுகின்றதெனின் அவர்களை பாராட்டிக் காட்டாமல் இருக்க முடியாது.

மட்டக்களப்பின் மூளையாக மிளிரும் கிழக்குப் பல்கலைக் கழகம் இந்த விடயத்தில் போற்றப்பட வேண்டியதொன்றாகும். கிழக்குப் பல்கலைக்கழக கலைப்பீடத்தில் நுண்கலைத்துறைப் பேராசிரியராக இருந்த பெருமைக்குரிய பேராசான் மௌனகுரு அவர்கள் இக்கலைஞர்களுக்கு புத்தூக்கம் கொடுக்க ஆரம் பித்தார்.

வருடா வருடம் உலக நாடக விழாக் கொண்டாடி மகிழும் இவர்கள், பறை மேளக் கலைஞர்களை மாத்திரமல்ல, அனைத்துப் பாரம்பரியக் கலைகளையும் வெளிக்கொணரத் தொடங்கினார். பறைமேளம் பயிலும் மாணவ அணியினரை உருவாக்கினார். அது அழிந்துபோகாமல் நீருற்றி வளர்து வரு கின்றமை எமக்கெல்லாம் தைரியம் ஊட்டும் செயலாகவே இருக்கின்றது.

பேராசிரியர் அவர்கள் மிக எழிமையானவர் ஆயிரம் ஆயிரம் பட்டதாரிகளை உருவாக்கிய செம்மல், மாத்திரமா பட்டி தொட்டி யெல்லாம் இந்த கலைகளை ஊக்குவிக்க பாடுபடுகின்ற ஒருவர். பல்கலைக்கழகங்கள் பட்டதாரிகளை மாத்திரம் உருவாக்கும் இடம் எனும் அர்த்தமற்ற சிந்தனைக்கு புதிய வடிவங் கொடுத்து, அந்த சமுகத்தின் கலை, கலாசாரம், பண்பாடு, நாகரிகம் என்பனவற்றினை கட்டிக்காக்கின்ற ஒரு புனிதப்பள்ளி என்பதை இவரின் செயற்பாடு காட்டத்தவறவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறான ஊக்குவிப்பு, கௌரவிப்பு, தட்டிக்கொடுத்தல் என்பன பல்கலைக்கழக மட்டத்தில் மாத்திரம் நின்றுவிடாமல், அனைத்து நிகழ்வுகளிலும், அனைத்து மட்டங்களிலும் அவை பிரதிபலிக்கும்படி செய்யவேணும். அவர்களுக்கென ஊக்கு விப்புத்தொகை, பாராட்டுக்கள் என்பன வழங்கப்படுவதோடு பல் கலைக்கழக, கல்லூரி மற்றும் பாடசாலை போன்ற கல்விக் கூடங்களில் அவை பயிலப்படவேண்டும்.. இது வெறும் ஆதங்கம் தான் இருப்பினும் இது எங்களது கனவாகாமல் நிஜத்தில் கொண்டு வருவோம், எங்களை நாங்கள் பண்பாடுவோம்.

ஆய்ந்து அறிந்து சொல்லுவது ஒன்றும் முக்கியமல்ல, அவற்றை நடைமுறைப்படுத்தவேண்டிய பொறுப்பு தழிழுர்கள் ஒவ்வொருவரினதும் பொறுப்பல்லவா? இல்லாவிடின் நாளை இன்னொருவன் வந்து இங்கு தழிழர்கள் வாழ்ந்தார்களா! என்று கேட்கும்போது, நாங்கள் அவற்றின் அடையாளங்களை துலைத்து பல்லை இழித்தால் பயன் இல்லை.. நடைமுறைப் படுத்த முன்வர வேண்டும்..

இச்சமாதான காலத்தில் அவற்றை கொஞ்சம் கொஞ்சமாக மீளமைக்க வேண்டும்.. அது தான் நமது அடுத்த பரம்பரைக்கு இனத்துவ அடையாளமாக அமையும் என்பதை உணர வேண்டும்.

நன்றி.

**எடுத்துரைத்தோன்: சி.தணிகசீலன்.**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணுவின் அளவைச் சொல்லாத காலத்தின் போது தமிழர் நீட்டல் அளவை வாய்ப்பாடு சொல்லி வைத்துள்ளனர்

| | | |
|---|---|---|
| 8 அணு | – | 1 தேர்த்துகள் |
| 8 தேர்த்துகள் | – | 1 பஞ்சிழை |
| 8 பஞ்சிழை | – | 1 மயிர் |
| 8 மயிர் | – | 1 கடுகு |
| 8 கடுகு | – | 1 நுண்மணல் |
| 8 நுண்மணல் | – | 1 நெல் |
| 8 நெல் | - | 1 பெருவிரல் |
| 12 பெருவிரல் | – | 1 சாண் |
| 2 சாண் | – | 1 முழம் |
| 4 முழம் | – | 1 கோல் |
| 500 கோல் | – | 1 கூப்பிடு |
| 4 கூப்பிடு | – | 1 காதம் |





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கம்பன் காட்டும் எண்ணளவை இன்றைய கணிதவியலறிஞர்கள் இதனை அளவிட்டுரைக்க முடியாது என்கின்றனர்

தமிழ் மொழி எண்களையும் வடமொழி எண்களையும் 'பிங்கலந்தை' எனும் நிகண்டு நூல் பின்வருமாறு குறிப்பிடுகிறது.

ஏகம் எண்மடங்கு கொண்டது கோடி
கோடி எண் மடங்கு கொண்டது சங்கம்
சங்கம் எண் மடங்கு கொண்டது விந்தம்
விந்தம் எண் மடங்கு கொண்டது குமுதம்
குமதம் எண் மடங்கு கொண்டது பதுமம்
பதுமம் எண் மடங்கு கொண்டது நாடு
நாடு எண் மடங்கு கொண்டது சமுத்திரம்
சமுத்திரம் எண் மடங்கு கொண்டது வெள்ளம்.

அறிவியலின் தாக்கம் தொடர்ந்து வரும் இலக்கிய பரிணாமத் தினூடே கலந்து வந்தன.

மேலும் இது போன்ற எண்ணற்ற அறிவியற் செய்திகள் இலக் கியத்தில் நிறைய உள்ளன.

இக்காலம் அறிவியல் எனும் பாற்கடலை அப்படியே அள்ளிக் குடித்திட வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறது.
இதற்கு தமிழ் இலக்கியம் நிச்சயம் துணை நிற்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்



## எமது அன்னை திருமதி நாகம்மா


அவர்கள் அமரத்துவம் அடைந்தமையிட்டு நேரில் வந்து ஆறுதல் கூறியும், மலர் வளையங்கள் சாத்தியும், பதாகைகள் ஊடாகவும், குறும் செய்திகள் ஊடாகவும், தொலைபேசி மூலமாகவும், தங்கள் இறுதி மரியாதையையும், அஞ்சலியையும் செலுத்திய உறவினர்கள், கட்சித் தோழர்கள், நண்பர்கள், பல்வேறு கட்சிகளின் தலைவர்கள், அரசியல் சமூகத்தினர், சமூக அமைப்புக்களைச் சேர்ந்தவர்கள், நாடாளுமன்றற உறுப்பினர்கள், மாகாணசபை உறுப்பினர்கள், பாடசாலை சமூகத்தவர்கள், மாகாணக்கல்வி அமைப்பின் பல்வேறு துறையினர், வலயக் கல்வியியலாளர்கள் மற்றும் பிரமுகர்களுக்கும், அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை, மன்னார் வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி போன்ற தொலைதூர பிரதேசங்களில் இருந்து வந்து எமது அன்னையின் இறுதிக்கிரியைகளிலும், இறுதி யாத்திரையை கௌரவமாகவும், அமைதியாகவும், நடத்துவதற்கு உதவி புரிந்த அனைத்து தோழர்கள், நண்பர்கள், உறவினர் களுக்கும் எமது அன்னையை வைத்தியசாலையில் பராமரிப் பதற்கு உதவி செய்த அனைத்து உள்ளங்களுக்கும், வைத்தியர் களுக்கும், தாதிமார்களுக்கும் அம்மாவுக்கான அம்மலரை காலக்கிரமத்தில் அச்சமைத்து தந்த மதிகலர்ஸ் பிறிண்டர்ஸ்ற்கும் எமது குடும்பத்தின் சார்பாக இதயம் கனிந்த நன்றிகளை சமர்ப் பிக்கின்றோம்.

**குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்சா




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ம்சாவழி




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பகவத் கீதை



சந்திரனிலே காணப்படும் சிறுகளங்கம்
அதன் ஒளிக்குப்
பாதகமானதாக ஆவதில்லை
அது போலவே புனித
குணங்களின் பாதையிலே
முன்னேறும் ஒருபக்தனின்
தற்காலிகமான நிலை இழிவு
அவனைத்தீயவனாக்குவதில்லை

அதே சமயம் உன்னத
அன்புத் தொண்டில்
இருக்கும் பக்தனொருவன்
எல்லாவிதமான தீய
செயலனைத்திலும் ஈடுபடலாம்
என்று ஒருவன் தவறாக
புரிந்து கொள்ளக்கூடாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org